# பெண்களுக்கான அன்பளிப்பு

(மாதர் அறியவேண்டிய மார்க்க விளக்கங்கள்)

தொகுப்பாசிரியர்:
அஷ்-ஷைக் மௌலவி இஹ்ஸான் (ரஷாதி)

வெளியீடு:
தாருல் ஹம்தான்

# பெண்களுக்கான அன்பளிப்பு

(மாதர் அறியவேண்டிய மார்க்க விளக்கங்கள்)

வெளியீடு:

தாருல் ஹம்தான்

தொகுப்பாசிரியர்:

**அஷ்-ஷைக் மௌலவி**
**இஹ்ஸான் (ரஷாதி)**

சிரேஷ்ட விரிவுரையாளர்,
ரஷாத் அரபுக் கல்லூரி,
கிராண்ட்பாஸ்,
கொழும்பு 14,
இலங்கை.

## நூல் விபரக் குறிப்பு

நூலின் பெயர் : பெண்களுக்கான அன்பளிப்பு

தொகுப்பாசிரியர் : அஷ்-ஷைக் மௌலவி
இஹ்ஸான் (ரஷாதி)

வெளியீடு : தாருல் ஹம்தான்
இல. 192/29C,
பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு - 12
இலங்கை.

மொழி : தமிழ்

பதிப்புரிமை : ஆசிரியருக்கே ©

முதல் பதிப்பு : ஏப்ரல் 2018

ISBN : 978-955-1656-49-2

விலை : 120/-

# பொருளடக்கம்


| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 05 |
| 1. | பெண்கள் இல்லைமைக் கற்பதின் முக்கியத்துவம் | 07 |
| 2. | பெண்கள் சுத்தம் | 11 |
| 2.1 | குளிப்பு | 11 |
| 2.2. | குளிப்பைக் கடமையாக்கும் விடயங்கள் | 11 |
| 2.3. | குளிப்பு கடமையானவர்கள் செய்வது ஹராமான விடயங்கள் | 12 |
| 2.4 | மாதவிடாய் (ஹைழ்) | 13 |
| 2.5. | பிரசவவிடாய் (நிபாஸ்) | 14 |
| 2.6. | இரண்டு ஹைழ்களுக்கு இடைப்பட்ட ஆகக் குறைந்த சுத்தமான காலம் | 14 |
| 2.7. | இஸ்திஹாழா | 14 |
| 2.8. | இஸ்திஹாழாகாரியின் சட்டம் | 14 |
| 2.9. | ஹைழ் அல்லது நிபாஸ் மூலமாக ஹராமாகும் விடயங்கள் | 15 |
| 3. | பெற்றோருக்குரிய கடமைகள் | 16 |
| 4. | கணவனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகள் | 19 |

## பொருளடக்கம்

| தலைப்பு | | பக்கம் |
| --- | --- | --- |
| 5. | ஹிஜாப் | 23 |
| 5.1. | ஹிஜாபின் நிபந்தனைகள் | 25 |
| 5.2. | ஹிஜாபின் சிறப்புகள் | 30 |
| 6. | நாவைப் பேணுதல் | 31 |
| 6.1. | புறம் பேசுதல் (ஙீபத்) | 33 |
| 6.2. | கோள் சொல்லுதல் | 35 |
| 6.3. | சாபமிடுதல் (பத் துஆ செய்தல்) | 36 |
| 6.4. | பரிகாசம் செய்தல் | 37 |
| 6.5. | ஓப்பாரிவைத்தல் | 38 |
| 7. | குழந்தை வளர்ப்பு | 39 |
| 7.1. | பெற்றோரின் முதன்மையான பொறுப்புக்கள் | 40 |

# முன்னுரை

சர்வ புகழும் எல்லாம் வல்ல நாயன் அள்ளாஹ்வுக்கே உரியது. அல்ஹம்து லில்லாஹ். ஸலவாத்தும் ஸலாமும் ஈருலகத் தலைவர் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார்கள், தோழர்கள் மீதும் உண்டாவதாக!

தீனுடைய பெரும்பாலான காரியங்களில் ஆண்களும், பெண்களும் சமமானவர்களே. ஆண்களுக்கு எதனை அள்ளாஹ் கட்டளையிடுகிறானோ அதனையே பெண்களுக்கும் கட்டளை யிட்டிருக்கிறான். உதாரணமாக ஆண்களுக்கு தொழுகை கட்டாயம் என்பதுபோல பெண்களுக்கும் கடமையாகும். ஆனால் மாத விடாயோ, பிரசவவிடாயோ வந்துவிட்டால் அக்காலத்தில் பெண்கள் தொழக்கூடாது. இவ்வாறு இஸ்லாத்தின் சட்டதிட்டங்களில் பெண்களுக்கு சில வித்தியாசங்கள் இருக்கின்றன. பெண்களுக்குக் குறிப்பான சில சட்டதிட்டங்களையும், தீனுடைய அம்சங்களையும், மார்க்க விளக்கங்களையும் ஒவ்வொரு பெண்களும் அறிந்திருப்பது கட்டாயக் கடமையாகும்.

பெண்களுக்கு குறிப்பாக தீனுடைய அம்சங்களை உள் ளடக்கிய ஒரு நூல் கோர்வை செய்யப்படுவது காலத்தின் தேவையாகும். அந்தப் பாரிய இடைவெளியை நிரப்புவதற்காக அள்ளாஹ்வின் கிருபையால் “பெண்களுக்கான அன்பளிப்பு” என்ற பெயரில் இச்சிறு நூல் கோர்வை செய்யப்பட்டுள்ளது. மாதர் அறியவேண்டிய மார்க்க விளக்கங்கள் இந்நூலில் எளிய நடையில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கையடக்க நூலை ஒவ்வொரு தாயும், சகோதரியும் படித்து விளங்கி அமல் செய்வதுடன் மற்றப் பெண்களுக்கும் இதை எடுத்தறியச் செய்தல் வேண்டும். இவ்வாறான நூற்கள் பெண்கள் கூடும் சபைகளிலும்,

மஜ்மாக்களிலும் வாசித்து முதாக்கறா செய்து பகிர்ந்து கொண்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும்!

இவ்வாறானதொரு நூல் கோர்வை செய்யப்படவேண்டுமென சில உஸ்தாதமார்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க இந்நூல் அள்ளாஹ்வின் கிருபையால் வெளிவருகின்றது.

இச்சிறு நூலை அள்ளாஹ்வின் பொருத்தத்திற்காக மாத்திரம் கோர்வை செய்ததாக ஒப்புக்கொண்டு, மறுமை நாள்வரை வரவிருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் இதை வழிகாட்டியாக ஆக்குவானாக! அதன் நன்மைகளை கியாமத் நாளில் எனது மீஸான் தராசின் எடையைக் கூட்டுவதற்கு காரணமாக ஆக்குவானாக!

இ.்து

அஷ்-ஷைக் மௌலவி இஹ்ஸான் (ரஷாதி),
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ரஷாத் அரபுக் கல்லூரி,
கொழும்பு - 14,
இலங்கை.

ஹிஜ்ரி 1439 ரபீஉல் அவ்வல் பிறை 19
07-12-2017

## 1. பெண்கள் இல்மைக் கற்பதின் முக்கியத்துவம்

ஒவ்வொரு பெண்ணும் தனது வாழ்க்கையுடன் சம்பந்தப் படக்கூடிய இஸ்லாத்தின் அனைத்து விடயங்களையும் கற்றுக் கொள்வது அவள்மீது கட்டாயமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "இல்மைத் தேடிப்படிப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்." (நூற்கள்: இப்னுமாஜா 224, தபறானி 10439, ஸஹீஹான ஹதீஸ்) இல்மைத் தேடிப்படிப்பது எவ்வாறு ஆண்களுக்குக் கடமையோ அதே போன்று பெண்களுக்கும் கடமையாகும்.

அல்லாஹ் தஆலா அல்-குர்ஆனில் பல இடங்களில் ஆண்களை விளித்துக் கூறியிருப்பதைப் போன்று பெண்களையும் விளித்துக் கூறியிருக்கிறான். அல்லாஹ் ஓர் ஆயத்தில் பின்வருமாறு கூறுகின்றான்; "நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும், முஸ்லிமான பெண்களும், விசுவாசிகளான ஆண்களும், விசுவாசிகளான பெண்களும், (அல்லாஹ்வுக்கு) வழிபாடு செய்பவர்களான ஆண்களும், வழிபாடு செய்பவர்களான பெண்களும், உண்மையே கூறுபவர்களான ஆண்களும், உண்மையே கூறுபவர்களான பெண்களும், பொறுமையாளர்களான ஆண்களும், பொறுமை யாளர்களான பெண்களும், உள்ளச்சத்தோடு அல்லாஹ்வைப் பயந்து நடக்கும் ஆண்களும், உள்ளச்சத்தோடு (அல்லாஹ்வை) பயந்து நடக்கும் பெண்களும், தானம் செய்பவர்களான ஆண்களும், தானம் செய்பவர்களான பெண்களும், நோன்பு நோற்பவர்களான ஆண்களும், நோன்பு நோற்பவர்களான பெண்களும், தங்கள் மர்மஸ்தானங்களைக் காத்துக் கொள்பவர்களான ஆண்களும், (மர்மஸ்தானங்களைக்) காத்துக் கொள்பவர்களான பெண்களும், அல்லாஹ்வை அதிகம் நினைவுகூருபவர்களான ஆண்களும், (அல்லாஹ்வை) அதிகமாக நினைவுகூருபவர்களான பெண்களும் (ஆகிய) இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான (நற்) கூலியையும் தயார் செய்து வைத்திருக்கிறான். (ஸூரா அஹ்ஸாப் 33:35)

இமாம் புஹாரி ரஹ்மதுள்ளாஹி அலைஹி அவர்கள் தனது கிரந்தத்தில் "பெண்களுக்கு இல்மைக் கற்றுக்கொள்ள தனி ஒருநாள் ஒதுக்கப்பட வேண்டுமா?" என்ற தலைப்பின் கீழ் பின்வரும் ஹதீஸைக் கொண்டு வருகிறார்கள். அபூஸஈதுல் குத்ரீ ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; (ஸஹாபா) பெண்கள் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "உங்களிடம் இல்மைக் கற்றுக் கொள்ளும் விடயத்தில் ஆண்கள் எங்களை மிகைத்துவிட்டனர். எனவே (இல்மைக் கற்றுத்தர) எங்களுக்காகவும் ஒரு நாளை ஒதுக்குங்கள்" என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்ட ஒரு தினத்தில் அவர்களிடம் வந்து இல்மைக் கற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தார்கள். அவ்வாறே அந்நாளில் நபியவர்கள் அவர்களிடம் சென்று உபதேசம் செய்தார்கள். அந்த உபதேசத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்; "உங்களில் யாராவது ஒரு பெண்ணின் மூன்று குழந்தைகள் மரணித்து (மறுமைக்கு முற்படுத்தி)விட்டால் அப்பெண்ணுக்கு அந்தக் குழந்தைகள் நரகத்திற்குத் திரையாக மாறிவிடுவார்கள்" என்று கூறினார்கள். அப்போது ஒரு பெண்மணி "இரண்டு குழந்தைகள் மரணித்தாலுமா?" என்று வினவ "(ஆம்) இரண்டு குழந்தைகள் மரணித்தாலும்தான்" என்று நபியவர்கள் பதிலளித்தார்கள். (நூற்கள்: புஹாரி 101, முஸ்லிம் 2633)

மேலும் இமாம் புஹாரி ரஹ்மதுள்ளாஹி அலைஹி அவர்கள் "இல்மைக் கற்றுக்கொள்ளும் விடயத்தில் வெட்கப்படுதல்" என்ற தலைப்பின் கீழ் முஜாஹித் ரஹ்மதுள்ளாஹி அலைஹி அவர்களின் கூற்றைக் கொண்டுவந்துள்ளார்கள். "வெட்கப்படுபவரோ, பெருமையடிப்பவரோ இல்மைக் கற்றுக்கொள்ள மாட்டார்" என்று முஜாஹித் ரஹ்மதுள்ளாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்; "அன்ஸாரிப் பெண்கள்தான் சிறந்த பெண்கள். தீனுடைய விடயங்களைக் கற்றுக்கொள்வதற்கு வெட்கம் அவர்களுக்குத் தடையாக இருக்கவில்லை" என்று ஆயிஷா ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள் கூறியுள்ளார்கள்.

அபூ ஸாஈதுல் குத்ரீ ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹஜ்ஜுப் பெருநாள் தினத்திலோ அல்லது நோன்புப் பெருநாள் தினத்திலோ நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழும் இடத்திற்கு வெளியாகி வந்தார்கள். தொழுகை முடிந்த பிறகு மக்களுக்கு உபதேசம் செய்தார்கள். "மனிதர்களே ! ஸதகாச் செய்யுங்கள்" என்று கூறி ஸதகா செய்யும்படி ஏவினார்கள். பின்னர் பெண்கள் திசைக்குச் சென்று "பெண்களே ! ஸதகாச் செய்யுங்கள் - ஏனெனில் நரகவாசிகளில் அதிகமானவர்கள் பெண்களாக இருக்க நான் கண்டேன்" என்று கூறினார்கள். அதற்குப் பெண்கள் "என்ன காரணம்? அள்ளாஹ்வின் தூதரே!" என்று வினவினார்கள். அதற்கு நபியவர்கள் "நீங்கள் அதிகமாக சாபமிடுகிறீர்கள். (உபகாரியான) கணவனுக்கு மாறுபுரிகிறீர்கள். அறிவிலும், மார்க்கத்தி(ன் கடமையி)லும் குறைபாடுள்ள நீங்கள் கூரிய அறிவுடைய ஆண்மகனின் புத்தியைப் போக்குவதில் உங்களைவிட எவரையும் நான் கண்டதில்லை" என்று கூறிவிட்டு திரும்பிச் சென்றார்கள். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டுக்கு வந்தவுடன் இப்னு மஸ்ஊத் றழியள்ளாஹு அன்ஹு அவர்களின் மனைவி ஸைனப் ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள் வீட்டுக்குள் வர அனுமதி கேட்டார்கள். "அள்ளாஹ்வின் தூதரே! இதோ ஸைனப் வந்து அனுமதி கேட்கிறார்" எனக் கூறப்பட்டது. "எந்த ஸைனப்?" என்று நபியவர்கள் வினவ "இப்னு மஸ்ஊத் றழியள்ளாஹு அன்ஹு அவர்களின் மனைவி" எனக் கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள் "ஆம். அவருக்கு அனுமதியளியுங்கள்" எனக் கூறினார்கள்.

உள்ளே வந்து "அள்ளாஹ்வின் நபியே! நீங்கள் ஸதகா செய்யும்படி ஏவினீர்கள். என்னிடத்தில் சில ஆபரணங்கள் இருக்கின்றன. அவற்றை நான் ஸதகா செய்ய நாடியபோது எனது கணவர் இப்னு மஸ்ஊத் றழியள்ளாஹு அன்ஹு அவர்கள் அவரும், அவருடைய மகனும் ஸதகாவைப் பெறுவதற்கு ஏனையவர்களைவிட மிக அருகதையுடையவர்கள் என்று கூறுகிறார்கள்" (உங்களின் விளக்கம் என்ன?) என ஸைனப் ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள்

கூறினார்கள். அதற்கு நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இப்னு மஸ்ஊத் ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் உண்மையே கூறியுள்ளார்கள். உமது கணவரும், உமது மகனும் நீர் கொடுக்கும் ஸதகாவை பெறுவதற்கு ஏனையவர்களைவிட மிக உரிமை படைத்தவர்கள்" என்று கூறினார்கள். (நூல்: புஹாரி 1462)

மேலும் இமாம் புஹாரி ரஹ்மதுள்ளாஹி அலைஹி அவர்கள் "இமாம் பெண்களுக்கு உபதேசம் செய்தலும், அவர்களுக்கு இல்மைக் கற்றுக் கொடுத்தலும்" என்ற தலைப்பின்கீழ் இப்னு அப்பாஸ் ரழியள்ளாஹு அன்ஹு அவர்களின் பின்வரும் ஹதீஸைக் கொண்டுவந்துள்ளார்கள். ஒரு பெருநாள் தொழுகைக்குப் பின் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிலால் ரழியள்ளாஹு அன்ஹு அவர்களுடன் பெண்களிருக்கும் பகுதிக்குச் சென்று அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள். ஸதகா செய்யும்படி அவர்களுக்கு ஏவினார்கள். நபியவர்களின் உபதேசத்தைக் கேட்ட பெண்கள் தமது காதுப்பூக்களையும், மோதிரங்களையும் பிலால் ரழியள்ளாஹு அன்ஹு அவர்களின் துணியோரத்தில் போட ஆரம்பித்தார்கள். (நூற்கள்: புஹாரி 98, முஸ்லிம் 884)

நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பெண்களுக்கு தீனுடைய விடயங்களை கற்றுக்கொடுக்கும் விடயத்திலும், அவர்களுக்கு உபதேசம் செய்யும் விடயத்திலும் எவ்வளவு முக்கியத்துவம் செலுத்தியுள்ளார்கள் என்பதற்கு இந்த ஹதீஸ்கள் ஆதாரமாக இருக்கின்றன. அந்த ஸஹாபாப் பெண்களின் நடைமுறைகளை தங்கள் வாழ்க்கைக்கு முன்மாதிரியாக எடுத்து நடப்பதில்தான் தற்கால முஸ்லிம் பெண்களின் சிறப்பும், வெற்றியும் தங்கியுள்ளது.

## 2. பெண்கள் சுத்தம்

### 2.1. குளிப்பு

முழு உடலையும் தண்ணீரால் கழுவுவதற்கு குளிப்பு என்று சொல்லப்படும்.

குளிப்பின் பர்ளுகள் இரண்டாகும்:

01. நிய்யத்து வைத்தல்

02. முழு உடலையும் தண்ணீரால் கழுவுதல்

நிய்யத்: கடமையான குளிப்பை நிறைவேற்றுகிறேன் அல்லது ஜனாபத்தைப் போக்குகிறேன் என்று மனதில் எண்ணிக்கொள்ளல் வேண்டும்.

உடலின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள தோல்களையும், முடிகளையும் கழுவ வேண்டும். இரண்டு காதுகள், கழுக்கட்டு, வயிற்றின் மடிப்புக்கள், நகங்களுக்குக் கீழுள்ள பகுதிகள் போன்றவற்றுக்கு தண்ணீரால் நனைக்கும் விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

குளிப்பதற்கு முன் இரு கரண்டைக் கைகளையும் கழுவிவிட்டு மர்மஸ்தானத்தையும், அதைச் சூழவுள்ள பகுதிகளையும் கழுவிக்கொள்ள வேண்டும். பின்னர் பூர்த்தியாக வுழூச் செய்துகொண்டு நிய்யத்து வைத்து குளிக்க ஆரம்பிக்க வேண்டும்.

### 2.2. குளிப்பைக் கடமையாக்கும் விடயங்கள்

ஒரு பெண்ணுக்கு ஆறு விடயங்களில் ஏதாவதொன்று நிகழ்ந்தால் குளிப்புக் கடமையாகிவிடும். அவையாவன:

01. தூக்கத்திலோ, விழிப்பிலோ இந்திரியம் வெளியாத...

02. உடலுறவு: கணவன் உடலுறவு கொண்டுவிட்டால் அவளுக்குக் குளிப்புக் கடமையாகிவிடும்.

03. மாதவிடாய் (ஹைழ்): பெண்ணுக்கு மாதவிடாய் வந்து இரத்தம் நின்றுவிட்டால் குளிப்பது கடமையாகிவிடும்.

04. பிரசவவிடாய் (நிபாஸ்): குழந்தை பிறந்ததற்குப்பின் வெளியாகும் இரத்தத்திற்கு பிரசவவிடாய் என்று சொல்லப்படும். பிரசவவிடாய் இரத்தம் நின்றுவிட்டால் குளிப்பது கடமையாகும்.

05. குழந்தைப்பேறு: ஈரமின்றித்தான் குழந்தை பிறந்தாலும் கூட பெண்களுக்குக் குளிப்புக் கட்டாயமாகிவிடும்.

06. மரணம்: ஒரு பெண்ணோ, ஆணோ மரணித்துவிட்டால் ஏனையவர்கள்மீது அவரைக் குளிப்பாட்டுவது கடமையாகிவிடும்.

## 2.3. குளிப்புக் கடமையானவர்கள் செய்வது ஹராமான விடயங்கள்

ஜனாபத்தின் மூலமாக ஆறு விடயங்கள் ஹராமாகிவிடும். அவையாவன:

01. தொழுதல்.

02. கஅபதுள்ளாஹ்வை வலம் வருதல்.

03. அல்-குர்ஆனைத் தொடுதல்.

04. அல்-குர்ஆனை சுமத்தல்.

05. அல்-குர்ஆனை ஓதுதல்.

06. பள்ளியில் தரித்திருத்தல்.

## 2.4. மாதவிடாய் (ஹைழ்)

குறிப்பிட்ட காலத்தில் பெண் பருவவயதை அடைந்தபின் அவளின் மர்மஸ்தானத்தால் வெளியாகும் இரத்தத்திற்கே ஹைழ் என்று சொல்லப்படும்.

ஒரு பெண் ஒன்பது வயதை அடைந்துவிட்டால் மாதவிடாய் வரலாம். பெரும்பாலும் ஐம்பது வயதை அடைந்துவிட்டால் நின்றுவிடும். சிலவேளை ஐம்பது வயதுக்குப் பிறகும் வரலாம். மாதவிடாயின் குறைந்த அளவு இருபத்து நான்கு மணித்தியாலங்கள் கொண்ட ஓர் இரவும், ஒரு பகலுமாகும். அதன்கூடிய அளவு பதினைந்து நாட்களாகும். பெரும்பாலான பெண்களுக்கு ஆறு அல்லது ஏழு நாட்களே வரும்.

இருபத்து நான்கு மணித்தியாலங்கள் கொண்ட ஓர் இரவும், ஒருபகலுமோ அதைவிட அதிகமாகவோ இரத்தம் வந்துகொண்டிருந்தால் அது மாதவிடாய் இரத்தமாகும். ஓர் இரவும், ஒரு பகலும் கழிவதற்கு முன் இரத்தம் நின்று பதினைந்து நாட்களுக்குள் மீண்டும் இரத்தம் வரவில்லையானால் அது மாதவிடாய் இரத்தமல்ல. அந்த இரத்தத்தைப் பொருட்படுத்தவேண்டியதில்லை. அவள் அக்காலத்தில் விட்ட தொழுகைகளையும், விட்ட நோன்புகளையும் கழாச் செய்ய வேண்டும்.

ஒருநாள் பூர்த்தியாவதற்கு முன் இரத்தம் நின்றுவிட்டது. ஆனால் இரண்டு நாட்கள் அல்லது பதினைந்து நாட்களை அடைவதற்குமுன் மீண்டும் வந்தது. பதினைந்து நாட்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வந்த மாதவிடாயின் காலத்தை கணிக்கப்பட்டு அவையனைத்தும் சேர்ந்து இருபத்து நான்கு மணித்தியாலங்கள் அல்லது அதைவிடக் கூடுதலாக இருந்தால் அனைத்துமே மாதவிடாயாகவே கணிக்கப்படும். பதினைந்து நாட்களுக்கு மேல் இரத்தம் வந்தால் அவள் "முஸ்தஹாழா" எனப்படும் பெரும்பாட்டுக்காரியாவாள். அவளுக்கு பிரத்தியேகமான சட்டங்கள் உள்ளன.

## 2.5. பிரசவவிடாய் (நிபாஸ்)

பிள்ளைப் பேற்றுக்குப்பின் மர்மஸ்தானத்தால் வெளியாகும் இரத்தத்திற்கே நிபாஸ் என்று சொல்லப்படும். அதன் ஆகக் குறைந்த நேரம் ஒரு நொடிப்பொழுதாகும். அதிகமான பெண்களுக்கு நாற்பது நாட்கள் வரும். நிபாஸின் ஆகக் கூடிய காலம் அறுபது நாட்களாகும். அறுபது நாட்களுக்கு மேல் இரத்தம் வந்தால் அது “இஸ்திஹாழா” எனப்படும் பெரும்பாட்டு இரத்தமாகும்.

## 2.6. இரண்டு ஹைழ்களுக்கு இடைப்பட்ட ஆகக் குறைந்த சுத்தமான காலம்

இரண்டு ஹைழ்களுக்கு இடைப்பட்ட ஆகக் குறைந்த சுத்தமான காலம் பதினைந்து நாட்களாகும். ஏழு நாட்கள் ஹைழ் வந்துவிட்டு பத்து நாட்கள் வரவில்லை. பத்து நாட்களுக்குப்பின் மீண்டும் இரத்தம் வந்தால் அது “இஸ்திஹாழா” வாகும். ஏனெனில் இரண்டு ஹைழ்களுக்கும் மத்தியில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த சுத்தத்திற்குரிய காலம்கூட கடக்கவில்லை.

## 2.7. இஸ்திஹாழா

ஹைழுடைய நாட்களிலோ, நிபாஸுடைய நாட்களிலோ அல்லாத காலத்தில் வெளியாகும் இரத்தத்திற்கு இஸ்திஹாழா என்று சொல்லப்படும். பதினைந்து நாட்களுக்கு மேல் வந்தால் அது இஸ்திஹாழாவாகும். அதேபோன்று இருபத்து நான்கு மணித்தியாலங்களைவிடக் குறைவான காலம் இரத்தம் வந்தாலும் அதற்கும் “இஸ்திஹாழா” என்றே சொல்லப்படும்.

## 2.8. இஸ்திஹாழா காரியின் சட்டம்

இஸ்திஹாழாகாரி சுத்தமானவளாவாள். தொழுவதும், நோன்பு பிடிப்பதும் அவளுக்குக் கட்டாயமானதாகும். அவளுடைய

கணவனுக்கு உடலுறவு கொள்ளவும் அனுமதியுண்டு. அவள் தொழ நாடினால் தொழுகையுடைய நேரம் நுழைந்ததற்குப் பின் தனது மர்மஸ்தானத்தைக் கழுவி சிரமமில்லையென்றிருந்தால் பஞ்சை வைத்தோ அல்லது பிடவையை வைத்தோ கட்டுப் போட்டுக் கொள்ள வேண்டும். தற்காலத்தில் "பேட்" களையும் பயன்படுத்தலாம். நோன்பாளியாக இருந்தால் அல்லது சிரமம் ஏற்படும் என்றிருந்தால் கட்டுப்போடுவது கடமையில்லை. பின்னர் வுழூ செய்து கொள்வாள். இவையனைத்து விடயங்களையும் பர்ழான தொழுகைக்குரிய நேரம் நுழைந்ததன் பின்னரே செய்து முடிக்க வேண்டும். வுழூச்செய்து முடித்தவுடனேயே தொழுது கொள்ள வேண்டும். ஒவ்வொரு பர்ழான தொழுகைக்கும் புதிதாகக் கட்டுப் போட்டுக் கொள்வதும், புதிதாக வுழூச் செய்து கொள்வதும் கட்டாயமாகும்.

### 2.9. ஹைழ் அல்லது நிபாஸ் மூலமாக ஹராமாகும் விடயங்கள்

ஹைழ் அல்லது நிபாஸ் ஏற்பட்ட பெண்கள் ஏழு விடயங்களைச் செய்வது ஹராமாகும். அவையாவன:

01. தொழுதல்.
02. கஅபதுள்ளாஹ்வை வலம் வருதல்.
03. அல்-குர்ஆனை தொடுதல்
04. அல்-குர்ஆனை சுமத்தல்
05. அல்-குர்ஆனை ஓதுதல்
06. மஸ்ஜிதில் தரித்தல்
07. நோன்பு நோற்றல்

ஹைழ் அல்லது நிபாஸ் ஏற்பட்ட பெண்ணுடன் கணவன் உடலுறவு கொள்ளவோ அல்லது தொப்புளுக்கும், முழங்காலுக்கும் இடையில் இன்பம் அனுபவிக்கவோ நாடினால் அதற்கு மனைவி அனுமதிக்கக் கூடாது.

அள்ளாஹ் அதைப்பற்றி அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்; மேலும் (நபியே!) மாதவிடாய் பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். (அவர்களுக்கு) நீர் கூறுவீராக: அது ஓர் (அசுத்தமான) உபாதையாகும். அந்த மாதவிடாயின் காலத்தில் பெண்களைவிட்டு விலகி இருங்கள். அவர்கள் (உதிரப்போக்கி லிருந்து) சுத்தமாகும் வரை அவர்களை அணுகாதீர்கள். அவர்கள் சுத்தமாகி விட்டால் அள்ளாஹ் உங்களுக்குக் கட்டளையிட்ட பிரகாரம் அவர்களிடம் நீங்கள் வாருங்கள். நிச்சயமாக அள்ளாஹ் பாவங்களை விட்டும் மீள்கின்றவர்களை நேசிக்கின்றான். பரிசுத்த மானவர்களையும் நேசிக்கிறான்." (ஸூரதுல் பகரா 2:222)

தான் மாதவிடாய் இல்லாத காலத்தில் மாதவிடாய் வந்துள்ளது என்று பொய்யுரைப்பது ஹராமாகும். அதே போன்று கணவன் நெருங்க நாடினால் மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண் அதைப் பற்றி கணவனுக்கு அறிவிக்காமல் இருப்பது ஹராமாகும்.

தொழுகையுடைய நேரம் நுழைந்து அதை தொழுமளவு நேரம் மீதமாக இருந்தும் ஒரு பெண் தொழவில்லை. அப்பொழுது அவளுக்கு ஹைழ் அல்லது நிபாஸ் வந்துவிட்டால் அவ்விரண்டி லிருந்தும் சுத்தமானதற்குப் பின்னால் அந்தத் தொழுகையையும் கழாச் செய்வது கட்டாயமாகும்.

### 3. பெற்றோருக்குரிய கடமைகள்

பெற்றோர்களுக்கு வழிப்படுவதையும், அவர்களுக்குப் பணிவிடை செய்வதையும் இஸ்லாம் முஸ்லிமான ஆணுக்கும், பெண்ணுக்கும் கடமையாக்கியுள்ளது. அள்ளாஹ் அவ்விருவரையும் நீங்கள் உலகத்தில் பிறப்பதற்குக் காரணமாக்கினான். அவ்விருவரும் உங்களை பராமரித்து ஆளாக்கினார்கள். சிறு வயதிலிருந்தே உங்களுக்காக மிகவும் சிரமப்பட்டார்கள். அவ்விருவருக்கும் உபகாரம் புரிவதை அள்ளாஹ் உங்கள் மீது கடமையாக்கி யுள்ளான். அள்ளாஹு தஆலா அல்குர்ஆனில் ஓர் இடத்தில்

அவனை வணங்குவதற்கு அடுத்தாக பெற்றோருக்கு உபகாரம் புரிவதையே குறிப்பிட்டுள்ளான். அள்ளாஹ் அல்-குர்ஆனில் கூறியிருக்கின்றான்; "உமது இரட்சகன் அவனைத் தவிர (வேறு எவரையும், எதனையும்) நீங்கள் வணங்கக்கூடாதென்றும், தாய் தந்தையருக்கு (நன்கு) உபகாரம் செய்யவேண்டுமென்றும் விதியாக்கியுள்ளான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது இவ்விரு வருமோ உம்மிடத்தில் முதுமையை அடைந்துவிட்டால் அவர்களை நோக்கி 'சீ' என்றும் சொல்ல வேண்டாம். அவ்விருவருக்கும் கண்ணியமான சொல்லையே கூறவும். இன்னும் கிருபையினால் பணிவென்னும் இறக்கையை அவ்விருவருக்கும் தாழ்த்துவீராக! "என்னுடைய இரட்சகனே! சிறு குழந்தையாக இருந்தபொழுது என்னை அவ்விருவரும் (பரிவுடன்) வளர்த்தது போன்று அவ்விருவருக்கும் நீ அருள் புரிவாயாக!" என்று (பிரார்த்தித்துக்) கூறுவீராக. (ஸூரா பனீ இஸ்ராஈல் 17:23-24)

உங்கள் தந்தையோ, தாயோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரையும் சங்கைப்படுத்துவதும், அவர்களின் பேச்சை மதிப்பதும், அவ்விருவருடனும் ஒழுக்கமான முறையில் நடப்பதும் உங்களுக்குக் கட்டாயமாகும். அவ்விருவருக்கும் "சீ" என்றுகூட சொல்லக்கூடாது. அழகான வார்த்தைகளைக் கொண்டு அவர்களுடன் பேச வேண்டும். உங்களுடன் உங்கள் பிள்ளைகள் எப்படிப் பேசுவதையும், பழகுவதையும் நீங்கள் விரும்புகிறீர்களோ அதேபோன்று நீங்களும் உங்களுடைய தாய் தந்தையர்களுடன் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் அவர்களுக்கு முன்னால் உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். நீங்கள் சிறு குழந்தையாக இருக்கும்போது உங்கள் மீது அவ்விருவரும் எவ்வளவு கருணை காட்டினார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். பெற்றோருக்குரிய கடமைகளை விளங்குவதற்கும், அவ்விருவரின் சிறப்பை அறிவதற்கும் மேற்குறிப்பிட்ட ஆயத்து ஒன்றே போதுமானது.

பெற்றோரை மதிக்க் வேண்டும், அவர்களுக்கு சங்கை செய்ய வேண்டும், அவ்விருவரின் கட்டளையை உடனடியாக செயற்படுத்த வேண்டும், தன் குழந்தைகளுக்கு பணிவிடை செய்வதைவிட அவர்களுக்கு உபகாரம் செய்வதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும், அவ்விருவருக்கும் பணிவிடை செய்வதை பாரமாகக் கருதக்கூடாது. மாற்றமாக பாக்கியமாகக் கருத வேண்டும்.

பெற்றோருக்கு நோவினை செய்வது பெரும் பாவங்களில் ஒன்றாகும். ஒருமுறை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களைப் பார்த்து "மாபெரும் பாவம் என்ன என்பதை உங்களுக்கு நான் அறியத்தரட்டுமா?" என்று வினவினார்கள். அதற்கு ஸஹாபாக்கள் "ஆம், அறிவித்துத் தாருங்கள் அள்ளாஹ்வின் தூதரே!" என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள் "அள்ளாஹ்வுக்கு இணைவைப்பதும், பெற்றோருக்கு நோவினை செய்வதுமாகும்" என்று கூறினார்கள். (நூற்கள்: புஹாரி 2654, முஸ்லிம் 87)

தந்தைக்குச் செலுத்த வேண்டிய கடமைகளைவிட தாய்க்குரிய கடமைகள் பிள்ளைகள்மீது அதிகமாக இருக்கின்றன. தாய் முதுமையை அடைந்துவிட்டால் ஆண்பிள்ளைகளால் நிறைவேற்ற முடியாத எத்தனையோ பணிவிடைகள் பெண் குழந்தைகள் மீது பொறுப்பாகி விடுகின்றன. தாயின் மகிமையை உணர்த்தும் ஒரு ஹதீஸைக் குறிப்பிடுகிறேன். ஒருமுறை ஒரு மனிதர் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து "நல்ல முறையில் உபகாரம் புரிவதற்கு மனிதர்களிலே மிகவும் தகுதியுடையவர் யார்?" என வினவினார். அதற்கு நபியவர்கள் "உமது தாய்" என்று கூறினார்கள். "அதன் பின்னர் தகுதியுடையவர் யார்?" என்று வினவப்பட்டது. "உமது தாய்" என்று பதிலளித்தார்கள். பின்னர் யார் என மூன்றாவது முறையும் வினவினார். அதற்கும் நபியவர்கள் "உமது தாய்" என்றே பதிலளித்தார்கள். "அதன் பின்னர் யார்? என்று வினவ "உமது தந்தை" என நபியவர்கள் விடையளித்தார்கள். (நூற்கள்: புஹாரி 5971, முஸ்லிம் 2548)

பெற்றோரை நல்ல வார்த்தைகள் கொண்டு அழைக்க வேண்டும். அவ்விருவரின் பெயரைச் சொல்லி அழைக்கக் கூடாது. அவர்களின் சப்தத்தைவிட தனது சப்தத்தை உயர்த்திப் பேசக் கூடாது. அவ்விருவருக்கும் முன்னால் நடக்கக்கூடாது.

தாய், தந்தை இருவருக்கும் அவர்களின் வாழ்நாளில் உபகாரம் புரிந்தது போல் அவர்களின் மரணத்திற்குப் பின்னரும் உபகாரம் புரிய வேண்டும். அதாவது அவ்விருவருக்குமாகப் பிரார்த்தித்தல், பாவமன்னிப்புத் தேடுதல், தான தர்மங்கள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட வேண்டும். அவ்விருவரின் கடன்களை அடைக்கவும், வஸியத்துக்களை பூர்த்தி செய்யவும் விரையவேண்டும். அவ்விருவரின் உறவினர்களுடனும் சேர்ந்து நடக்க வேண்டும். அவர்களின் நண்பர்களுக்கு உபகாரம் புரியவேண்டும்.

## 4. கணவனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகள்

ஆண்கள்தான் பெண்களை நிர்வகிக்கக்கூடியவர்கள். அள்ளாஹ் பெண்களைவிட ஆண்களை சில விடயங்களைக் கொண்டு சிறப்பித்திருக்கிறான். அதிகமான புத்தி, அதிகமான தீனுடைய பொறுப்பு, சிறந்த நிர்வகிப்பு, அமல்களிலும் வழிபாடுகளிலும் அதிகமான சக்தி, சாட்சியிலே அதிகமான பங்கு, திருமணத்தில் வலிகாரர் எனும் பொறுப்புதாரி, அனந்தரச் சொத்தில் அதிகமான பங்கு போன்ற விடயங்களைக் கொண்டு கண்ணியப் படுத்தி இருக்கிறான். ஜிஹாதும், ஜுமுஆவும் ஆண்களுக்கே கடமையாகும். குழந்தைகளின் பரம்பரை அவருக்கே சொந்தமானது போன்ற சிறப்பம்சங்கள் அவருக்குரியதாகும். இக் காரணங்களை முன்னிட்டு பெண்களை நிர்வகிக்கும் பொறுப்பை அள்ளாஹ் ஆண்களிடம் ஒப்படைத்திருக்கிறான். அள்ளாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்; "ஆண்கள் பெண்களை நிர்வகிக்கக் கூடியவர்களாவர். ஏனெனில் அவர்களில் சிலரை விட (மற்ற) சிலரை அள்ளாஹ் மேன்மையாக்கி வைத்திருப்பதாலும், (ஆண்க

ளாகிய) அவர்கள் தங்கள் செல்வத்திலிருந்து (பெண்களுக்காக) செலவு செய்வதாலுமாகும். ஆகவே, நல்லொழுக்கமுள்ள பெண்கள் (என்போர் அள்ளாஹ்வுக்குப் பயந்து தங்கள் கணவனுக்கு) பணிந்து நடப்பவர்கள். (கற்பு மற்றும் தங்கள் கணவனது உடைமைகள் ஆகிய) மறைவானதை அள்ளாஹ் பாதுகாக்கின்ற காரணத்தால் பேணிக் காத்துக் கொள்பவர்கள். (ஸூரதுன் நிஸா 4:3)

பெண் கணவனுக்குச் செலுத்த வேண்டிய மாபெரும் கடமைகள் இருக்கின்றன. அந்தக் கடமைகளின் பொறுப்பை உணர்த்தவே நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்; "நான் யாரையாவது யாருக்கேனும் ஸஜ்தா செய்ய வேண்டுமென ஏவுவதாக இருந்தால் கணவனுக்கு ஸஜ்தா செய்யும்படியாக மனைவிக்கு ஏவியிருப்பேன்." (நூற்கள்: அபூதாவூத் 2140, திர்மிதி 1159, ஸஹீஹான ஹதீஸ்) தாயே, சகோதரியே மாபெரும் நன்மையைத் தட்டிக் கொள்வதற்காக உங்களது கணவனின் பணிவிடையில் ஈடுபடுங்கள்.

தன் கணவனின் கட்டளையை எடுத்து நடக்க வேண்டும். அவருக்கு வழிப்பட வேண்டும். கணவன் மனைவியை விரிப்புக்கு அழைத்தால் உடனடியாகச் செல்ல வேண்டும். மார்க்கம் தடுத்த எந்தத் தடையும் மனைவிக்கு இல்லையென்றால் அவள் விரிப்புக்குச் செல்லாமல் இருப்பதற்கு அனுமதியில்லை. அவ்வாறு செல்லாமல் இருக்கும் பெண்களுக்கு கடும் எச்சரிக்கை வந்துள்ளது. நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "ஒரு மனிதர் தனது மனைவியை விரிப்புக்கு அழைத்து அவள் செல்லாததன் காரணமாக அவள்மீது கோபப்பட்டவராக கணவன் இரவைக் கழித்தால், மலக்குமார்கள் காலையாகும் வரை அவளை சபிக்கின்றனர். (நூற்கள்: புஹாரி 5193, முஸ்லிம் 1436)

கணவனுக்கு வழிபடுவது சொர்க்கம் நுழைவதற்குக் காரணமாகும். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "ஒரு பெண்மணி ஐந்துநேரத் தொழுகைகளையும் தொழுது, ரமழான் மாதத்தில் நோன்பையும் நோற்று, தனது

மர்மஸ்தானத்தையும் பாதுகாத்து, தனது கணவனுக்கும் வழிப்பட்டால் தான் விரும்பிய வாயிலின் மூலமாக சொர்க்கத்துக்குள் நுழையலாம்." (நூற்கள்: அஹ்மத் 1661, தபறானி அவ்ஸத், பஸ்ஸார், இந்த ஹதீஸ் ஹஸனின் தரத்தைச் சேர்ந்தது என இமாம் ஹைஸமீ அவர்கள் மஜ்மஉஸ் ஸவாஇத் 4: 305-306 இல் குறிப்பிட்டுள்ளார்கள்.)

கணவனின் கண்ணியத்தை அவருக்கு முன்னிலையிலும், அவரில்லாத சமயத்திலும் பாதுகாக்க வேண்டும். அவரின் திருப்தியை எப்பொழுதும் பெற்றுக் கொள்ள வேண்டும். தன் உடம்பிலோ, கணவனின் பொருளிலோ அவருக்கு மோசடி செய்யக் கூடாது. தனது அழகைக் கொண்டு கணவனுக்கு முன்னால் பெருமையடிக்கக் கூடாது. குறைவாகவோ, கூடுதலாகவோ அள்ளாஹ் கணவனுக்கு வழங்கியிருக்கும் வசதிவாய்ப்பை மனத் திருப்தியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். கணவன் மூலமாக தனக்குக் கிடைக்கும் சொற்ப பொருளையும், குறைந்த செலவீனத்தையும் பொருந்திக் கொள்ள வேண்டும். அவருடைய வசதியைவிட அதிகமான செலவுகளைக் கேட்டு வற்புறுத்தக்கூடாது. ஏனைய பெண்கள் அணியும் ஆடைகளையும், நகைநட்டுக்களையும் பார்த்துவிட்டு அதே போன்று தனக்கும் வாங்கித் தருமாறு கணவனுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. தன்னிடத்தில் இருக்கும் உடைகளும், நகைநட்டுக்களும், வீடு வாசல்களும் தனக்குப் போதுமானது என்று மனநிறைவடைய வேண்டும்.

தனது சக்திக்குட்பட்ட வீட்டுவேலைகள் அனைத்தையும் தானே செய்ய வேண்டும். சொர்க்கப் பெண்களின் தலைவி பாத்திமா ரழியள்ளாஹு அன்ஹா அவர்களைவிடவும் நான் சிறந்த கண்ணிய மானவள் என எந்தப் பெண்ணும் தன்னை எண்ண வேண்டாம். அவ்வளவு கண்ணியங்களும், மகத்துவங்களும் நிறைந்த எங்களுடைய தலைவி பாத்திமா ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள் வீட்டு வேலைகளைத் தானே செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். மாவை அரைத்து பினைந்து ரொட்டி சுடுவார்கள். இன்னோரன்ன வீட்டு வேலைகளைச் செய்வதன் காரணமாக கையில் தழும்புகூட வந்திருந்தது. ஒருமுறை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்

அவர்களின் சமுகத்திற்கு சில அடிமைகள் வந்திருந்தனர். பாத்திமா ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள் பணிவிடையின் சிரமத்தை தனது தந்தையாகிய நபியிடம் முறைப்பட்டு தன்னுடன் ஒரு பணியாளரை அழைத்துச் செல்ல வந்திருந்தார்கள். நபியவர்கள் வீட்டில் இல்லாததன் காரணமாக வந்த நோக்கத்தை ஆயிஷா ரழியள்ளாஹு அன்ஹா அவர்களிடம் கூறிச் சென்று விட்டார்கள். நபியவர்கள் வீட்டுக்கு வந்தவுடன் விடயத்தை ஆயிஷா ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள். உடனே நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாத்திமா ரழியள்ளாஹு அன்ஹா அவர்களின் வீட்டுக்கு வந்து "ஒரு பணியாளனைவிட சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா?" என்று வினவ பாத்திமா ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள் "ஆம்" என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீங்கள் தூங்குவதற்கு விரிப்புக்குச் சென்றால் ஸுப்ஹானள்ளாஹ் என்று முப்பத்து மூன்று தடவையும், அல்ஹம்து லில்லாஹ் என்று முப்பத்து மூன்று தடவையும், அள்ளாஹு அக்பர் என்று முப்பத்து நான்கு தடவையும் ஓதிக் கொள்ளுங்கள். அது உங்களுக்கு ஒரு பணிவிடைக்காரன் கிடைப்பதைவிடச் சிறந்தது" என்று கூறினார்கள். (நூற்கள்: புஹாரி 6318, (முஸ்லிம் 2727)

எவ்வளவு கண்ணியமான பெண்ணாக இருந்தாலும் கணவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்பதையும், வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதையும் இச்சம்பவத்தின் மூலமாக நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது உம்மத்தில் உள்ள பெண்களுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

கணவனின் அனுமதியின்றி வீட்டைவிட்டு வெளியில் செல்லக்கூடாது. தேவைக்காக வெளியில் சென்றாலும் தேவை முடிந்தவுடன் வீட்டுக்கு வந்துவிட வேண்டும். கணவனின் அனுமதியின்றி அந்நிய ஆண்கள் யாரையும் வீட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது. கணவனை எதிர்த்துப் பேசக்கூடாது. விவாதிக்கவும் கூடாது. அவரின் குறைகளை மறைக்க வேண்டும். அவரை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும். எப்பொழுதும் மனத்திருப்தியோடே சந்திக்க வேண்டும.

வீட்டில் எப்பொழுதும் அழகாகவும், சுத்தமாகவும் இருக்க வேண்டும். வாயை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாயினதோ, மூக்கினதோ, காதினதோ ஏனைய உறுப்புக்களினதோ துர்வாடையை ஒருபோதும் அவர் நுகரக்கூடாது. துர்வாடையான எதையாவது சாப்பிட்டால் உடனடியாக வாயைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். கமுக்கட்டு, மற்றும் மறைவான இடங்களின் முடிகளை வழித்து எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இன்னும் அவரின் விருப்பத்திற்கேற்ப வீட்டினுள் இருக்கும்போது ஆடை அலங்காரங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். படுக்கை அறையில் அவருக்கு விருப்பமான ஆடைகளை அணிய வேண்டும். அவருக்கு விருப்பமில்லாத ஆடைகளை அணியக்கூடாது. அவர் விரும்பும் மணங்களையே பூச வேண்டும்.

## 5. ஹிஜாப்

பெண்கள் முழு உடலையும் மறைத்து அணியும் ஆடைக்கே ஹிஜாப் என்று சொல்லப்படும்.

பெண் வீட்டினுள்ளே இருப்பதில்தான் அவளுக்குரிய அனைத்துச் சிறப்புக்களும், கண்ணியங்களும் இருக்கின்றன. தானே செல்ல வேண்டும் என்ற தேவைக்கே தவிர வீட்டைவிட்டு வெளியில் செல்லாமலிருப்பது ஏற்றமானது. பெண்களுக்கு வீடுகளிலேயே இருக்கும்படியாக அள்ளாஹ் தஆலா கட்டளையிட்டிருக்கிறான்; "இன்னும் (நபியுடைய மனைவியரே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள். முன்னைய அறியாமைக் காலத்தில் (பெண்கள் மறைக்க வேண்டியதை மறைக்காது) வெளிப்படுத்தி யதைப் போன்று வெளிப்படுத்தித் திரியாதீர்கள்." (ஸூரதுல் அஹ்ஸாப் 33:33)

நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "பெண் (அவ்ரத் எனும்) பூர்த்தியாக மறைக்கப்பட வேண்டியவளாவாள். அவள் தனது வீட்டைவிட்டு வெளியானால் ஷைத்தான் அவளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்துவிடுகிறான்.

எனவே அவள் வீட்டின் உள்ளே இருக்கும் பொழுதுதான் அல்லாஹ்வின் ரஹ்மத்துக்கு நெருக்கமாக இருக்கிறாள்." (நூற்கள்: திர்மிதி 1173, இப்னு ஹிப்பான் 5570, இப்னு குஜைமா 1686,1687, ஸஹீஹான ஹதீஸ்)

தனது கணவனோ தந்தையோ, மகனோ, வெளியில் சென்று தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருக்கும் பொழுது தானும் வெளியில் செல்ல வேண்டும் என்பதாக பெண் முயற்சிக்கக் கூடாது. அவ்வாறு அவளுக்கு வெளியில் செல்ல நேர்ந்தால் ஹிஜாப், அல்லது ஜில்பாப் அணிந்து செல்ல வேண்டும். தனது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். பாதையைத் தவிர அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு செல்லக் கூடாது. அல்லாஹு தஆலா அல்-குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்; "மேலும் நபியே! விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக, தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும், தங்கள் மர்மஸ்தானங்களைப் பேணிப் பாதுகாத்துக்கொள்ளவும்." (ஸூரதுன் நூர் 24:31)

அல்லாஹு தஆலா மு'.மினான பெண்கள் அனைவருக்கும் பின்வருமாறு கட்டளையிடுகின்றான்; "நபியே உம்முடைய மனைவியருக்கும், உம்முடைய புதல்விகளுக்கும், விசுவாசிகளின் பெண்களுக்கும் அவர்கள் தங்கள் ஜில்பாபுகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு நீர் கூறுவீராக." (ஸூரதுல் அஹ்ஸாப் 33:59)

### 5.1 ஹிஜாபின் நிபந்தனைகள்

ஹிஜாபுக்கு முக்கியமான நான்கு நிபந்தனைகள் இருக்க வேண்டும்.

### 01. முழு உடலையும் மறைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்

வெளியில் செல்லும்போது பெண் அணியும் ஹிஜாப் முழு உடலையும் மறைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தனது

அழகு அலங்காரத்தை அந்நிய ஆண்களுக்கு முன் வெளிக்காட்டக் கூடாது.

## 02. தன்னிலே அலங்காரமற்றதாக இருக்க வேண்டும்

ஹிஜாபின் நோக்கம் பெண்களின் அழகையும், அலங்காரத்தையும் மறைப்பதாகும். அழகை மறைக்க அணியும் ஹிஜாபே அலங்காரமானதாக இருந்தால் அணிவதன் நோக்கம் பிழைத்துவிடும். எனவே அணியக்கூடிய ஹிஜாப் சரிகை வேலைப்பாடு செய்யப்பட்டதாகவோ, பூ அலங்காரங்கள் போடப்பட்டதாகவோ, கண்ணைக் கவரக்கூடியதாகவோ இருக்கக்கூடாது.

## 03. மெல்லியதாக இருக்கக் கூடாது

பெண் ஹிஜாப் அணியும் துணி மெல்லியதாக இருக்கக் கூடாது. மாற்றமாக உடலின் பாகங்கள் தென்படாத, உள்ளாடைகள் விளங்காத தடிப்பமானதாக இருக்க வேண்டும். மெல்லிய ஆடையை அணிவது பித்னா எனும் குழப்பத்திற்குக் காரணமாகிவிடும். பெண்களின் அலங்காரத்தை இன்னும் அலங்கரித்துக் காட்டிவிடும். அவ்வாறான ஆடைகளை அணியும் பெண்கள் விடயத்தில் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடும் கோபப்பட்டிருக்கின்றார்கள். ஒருமுறை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; இரண்டு கூட்டத்தினர் நரகில் இருப்பார்கள். அவர்களை இன்னும் நான் காணவில்லை. முதலாவது மாட்டின் வால்களைப்போன்ற சாட்டைகளை வைத்துக் கொண்டு (அநியாயமாக) மக்களுக்கு அடித்துக் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினர். இரண்டாவது, அணிந்தும் நிர்வாணியான பெண்கள். (தானும் மற்றவர்களின் பக்கம்) சாய்கின்ற, (பிறரையும் தன்பக்கம்) சாய்க்கின்றவர்கள். அவர்களின் தலைமுடிகள் ஒட்டகத்தில் ஆடுகின்ற திமிலைப் போன்று இருக்கும். அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். அதன் வாடையைக் கூட நுகர மாட்டார்கள். அதன் வாடை இன்னின்னளவு தூரத்திற்கு வீசும். (நூல்: முஸ்லிம் 2128)

ஆலிம்கள் கூறியுள்ளார்கள்; மெல்லிய ஆடையை அணியும் பெண்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் பெயரளவில் ஆடைகள் அணிந்தவர்களாகவும், யதார்த் தத்தில் ஆடைகள் அணியாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

## 04. இறுக்கமற்ற விசாலமானதாக இருக்க வேண்டும்

ஹிஜாபாக அணியும் ஆடை இறுக்கமற்றதாகவும், விசால மானதாகவும் இருக்க வேண்டும். ஹிஜாபின் நோக்கம் பித்னாவைப் போக்குவதாகும். விசாலமானதை அணிந்தால்தான் அந்த நோக்கம் பூர்த்தியாகும். இறுக்கமானதோ, ஒடுக்கமானதோ, தோலின் நிறத்தை மறைத்தாலும்கூட அது உடலுறுப்புக்களின் பருமனை எடுத்துக் காட்டும். ஆண்களின் கண்களில் உடலுறுப்புக்களை வர்ணித்துக் காட்டும். அவ்வாறான ஆடைகளை அணிந்து வெளியில் செல்வதால் ஏற்படும் பித்னாக்களையும், குழப்பங்களையும் பற்றி சொல்லித்தான் அறிய வேண்டுமென்பதில்லை. வெட்கம் என்பது பெண்களுக்குக் கிரீடமாகும். வெட்கம் போய்விட்டால் ஈமான் போய்விடும். நபி ஸல்லல்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; வெட்கமும், ஈமானும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாகும். அதில் ஒன்று போய்விட்டால் மற்றதும் போய்விடும். (நூல்: ஹாகிம் 1:22 இல் பதிவு செய்துவிட்டு ஸஹீஹானது என்றும் கூறியுள்ளார்கள். அதனை இமாம் ஸஹபியும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.) அதாவது வெட்கம் போய்விட்டால் ஈமான் போய்விடும். ஈமான் போய்விட்டால் வெட்கம் போய்விடும் என்பது கருத்தாகும்.

பெண்களுக்கு வெளியே செல்ல நேர்ந்தால் இன்னும் சில விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவளின் மேனியிலோ, ஆடையிலோ நறுமணம் பூசியிருக்கக் கூடாது. அவ்வாறு நறுமணம் பூசிக்கொண்டு வெளியில் செல்லும் பெண்ணுக்கு விபசாரி என்ற கடினமான வார்த்தையை நபியவர்கள் பிரயோகித்துள்ளார்கள். அந்த வார்த்தையை எந்தவொரு ஒழுக்கமான பெண்ணுக்கும் தாங்கிக் கொள்ள முடியுமா?! நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; எந்தவொரு பெண் மணம் பூசிக்கொண்டு யாராவது ஆண்கள் நுகர வேண்டும் என்பதற்காக ஒரு கூட்டத்துக்குப் பக்கத்தால் நடந்து சென்றால் அவள் ஒரு விபசாரி ஆவாள். (நூற்கள்: அஹ்மத் 19599, நஸாஈ 5126, ஹஸனான ஹதீஸ்)

பள்ளி வாசலுக்குத் தொழச் செல்லும் பெண்களுக்கே நறுமணத்தை பக்கத்திலும் எடுக்க வேண்டாமென்று நபியவர்கள் தடுத்தார்களானால் தற்காலத்தில் தெருக்களுக்கும், சந்தைகளுக்கும் செல்லும் பெண்களுக்கு என்னவென்று கூறுவது?! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸைனப் ஸகபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவித்துள்ளார்கள்; "உங்களில் யாராவது ஒரு பெண் பள்ளிவாசலுக்கு வெளியாகிச் சென்றால் நறுமணத்திற்குப் பக்கத்தில் நெருங்கவும் வேண்டாம்." (நூல்: முஸ்லிம் 443)

ஒருமுறை ஒரு பெண்மணி அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பக்கத்தால் கடந்து சென்றாள். அவளிடமிருந்து நறுமணம் வீசிக் கொண்டிருந்தது. அதற்கு அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "அல்லாஹ்வின் அடியாளே! பள்ளிக்கா செல்கிறாய்?" என்று வினவ "ஆம்" என அப்பெண்மணி பதிலளித்தாள். "பள்ளிக்குச் செல்வதற்காகவா நறுமணம் பூசினாய்?" என்று வினவ "ஆம்" என்று அவளும் கூறினாள். அதற்கு அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "திரும்பிச் சென்று குளித்துவிட்டு வாரும். ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்: "எந்தப் பெண்மணி அவளிடம் நறுமணம் வீசிக்கொண்டிருக்க பள்ளிக்கு வெளியாகிச் செல்கிறாளோ அவள் வீட்டுக்கு வந்து குளித்துக்கொள்ளாதவரை அவளுடைய எந்தத் தொழுகையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது." (நூல்: பைஹகீ 3:246)

பள்ளிக்கு மணம் பூசிச் சென்றாலே குளித்து நறுமணத்தைப் போக்கும் வரை எந்தத் தொழுகையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றால் ஏனைய இடங்களுக்குச் செல்வதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?! வெளியில் செல்லும்போது நறுமணம் பூசிக்கொண்டு செல்பவர்களுக்கு இது கடுமையான எச்சரிக்கை யாகும். ஏனெனில் பெண்ணின் நறுமணம் என்பது ஆணின் இச்சையை தூண்டிவிடக் கூடியது.

வீட்டிலோ, வீதியிலோ, வைபவங்களிலோ ஆண்களுக் கென்றுரிய ஆடைகளை பெண்கள் அணியக் கூடாது. அவ்வாறு அணிபவர்களை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சபித்துள்ளார்கள். அபூஹுரைரா ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்; பெண்ணுக்கென்றுள்ள ஆடையை அணியும் ஆணையும், ஆணுக்கென்றுள்ள ஆடையை அணியும் பெண்ணையும் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சபித்தார்கள். (நூற்கள்: அபூதாவூத் 4098, ஹாகிம் 4:194, ஸஹீஹான ஹதீஸ்)

ஆண்களுக்கென்றுரிய பாதணிகளைக் கூட பெண்கள் அணியக்கூடாது. ஒருமுறை ஆயிஷா ரழியள்ளாஹு அன்ஹா அவர்களிடம் ஆணுக்கென்றுரிய செருப்பை அணியும் பெண்ணைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? என்று வினவப்பட்டது. அதற்கு ஆயிஷா ரழியள்ளாஹு அன்ஹா அவர்கள்; "(நடை, உடை, பாவனையில்) ஆணைப் போன்றிருக்கும் பெண்ணை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சபித்துள்ளார்கள்" என்று கூறினார்கள். (நூல்: அபூதாவூத் 4099, ஸஹீஹான ஹதீஸ்) அதாவது ஆணைப் போன்று ஆடையணியும் பெண் நபியவர்களின் சாபத்துக்குள்ளாவதைப் போன்று, பாதரட்சை அணியும் பெண்ணும் நபியவர்களின் சாபத்திற்கு உள்ளாவாள். எனவே ஒரு பெண் நடை, உடை, பாவனை போன்ற எதிலும் ஆணுக்கு ஒப்பாகக் கூடாது.

காபிரான பெண்களுக்குரியது என்று அறியப்பட்ட எந்த ஆடையையும் முஸ்லிமான பெண்கள் வீட்டிலோ, தெருவிலோ, வைபவங்களிலோ, வேறு இடங்களிலோ அணியக்கூடாது. நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்;"யார் ஒரு கூட்டத்திற்கு ஒப்பாகிறாரோ அவரும் அவர்களைச் சேர்ந்தவரே." (நூற்கள்: அஹ்மத் 5141, 5115, அபூதாவூத் 4031, ஸஹீஹான ஹதீஸ்)

அப்துள்ளாஹ் இப்னு அம்ரு ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; நான் குங்குமம் தோய்க்கப்பட்ட இரண்டு ஆடைகளை அணிந்திருப்பதைக் கண்ட நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இது காபிர்களின் ஆடையாகும். எனவே இதை அணிய வேண்டாம்" என்று கூறினார்கள். (நூற்கள்: முஸ்லிம் 2077, நஸாஈ 5316, ஹாகிம் 4:19)

சனநெரிசல் உள்ள இடங்களுக்குச் செல்வதை விட்டும் பெண்கள் தவிர்ந்துகொள்ள வேண்டும். ஆண், பெண் கலப்புமுள்ள இடங்களை விட்டும் தூரமாய் இருக்க வேண்டும். தேவையின்றி மொட்டை மாடிகளில் ஏறிக்கொண்டு இருக்கக்கூடாது. பக்கத்து வீடுகளை எட்டிப்பார்க்கக் கூடாது. பாதைகளையும், வீட்டுக்கு வருபவர்களையும் ஓட்டைகளாலோ, ஜன்னலுக்கு இடைகளாலோ, திரையோரங்களாலோ பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேவையின்றி பக்கத்து வீடுகளுக்குச் செல்லக் கூடாது. அப்படி பக்கத்து வீடுகளுக்கு செல்ல நேர்ந்தாலும் அனுமதி பெற்று தலைவாயிலாலே செல்ல வேண்டும். குசினிப் புறத்தாலோ, பின் வாயிலாலோ திடீரெனப்போய் புகக்கூடாது.

## 5.2 ஹிஜாபின் சிறப்புகள்

01. ஹிஜாப் அணிதல் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் வழிப்படுவதாகும்.

ஏனெனில் அல்லாஹ" தஆலா அல்-குர்ஆனில் பல இடங்களில் பெண்களை விளித்து ஹிஜாப் அணியுமாறு கட்டளையிட்டிருக்கிறான்.

02. ஹிஜாப் ஈமானின் அடையாளமாகும்.

ஏனெனில் அல்லாஹ" தஆலா அல்-குர்ஆனில் பல இடங்களில் "மு..மினான பெண்களே!" என்று விளித்துக் கூறியே ஹிஜாபின் கட்டளையை இட்டிருக்கிறான்.

03. ஹிஜாப் உளப்பரிசுத்தத்திற்குக் காரணமாகும்.

அல்லாஹ" தஆலா அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்; "மேலும் (நபியுடைய மனைவியரான) அவர்களிடம் யாதொரு பொருளை நீங்கள் கேட்க நேரிட்டால் திரைக்கப்பால் இருந்துகொண்டே அவர்களிடம் கேளுங்கள். அவ்வாறு செய்வது உங்கள் உள்ளங்களுக்கும், அவர்கள் உள்ளங்களுக்கும் மிகப்பரிசுத்தமானதாகும். (ஸூரதுல் அஹ்ஸாப் 33:53)

04. ஹிஜாப் பத்தினித்தனத்தின் அடையாளமாகும்.

05. ஹிஜாப் பெண்ணுக்குக் கிரீடமாகும்.

06. ஹிஜாப் வெட்கத்தின் சின்னமாகும்.

07. ஹிஜாப் பாவத்திலிருந்து பாதுகாப்புக்குக் காரணமாகும்.

08. ஹிஜாப் ஸஹாபாப் பெண்களின் வழிமுறையாகும்.

09. ஹிஜாப் அல்லாஹ்வின் திருப்திக்குக் காரணமாகும்.

10. ஹிஜாப் மானத்தை மறைக்கும் சாதனமாகும்.

11. ஹிஜாப் பெண்களின் வெற்றிக்கு வழியாகும்.

12. ஹிஜாப் நரகத்திற்குத் திரையாகும்.

குறிப்பு:

பெண்கள் தனது அவ்ரத்தை பெண்களுக்கு மத்தியில்கூடத் திறக்கக்கூடாது. பெண்களுக்கு அவர்களுக்கு மத்தியிலுள்ள அவ்ரத் தொப்புளுக்கும், முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். பெண்கள் தமது தொப்புளுக்கும், முழங்காலுக்கும் இடைப்பட்ட மறைவிடத்தை எந்தப் பெண்களுக்கு மத்தியிலும் திறக்கக்கூடாது. அந்தப் பெண் தனது தாயாக, அல்லது தனது மகளாக, தனது சகோதரியாக, பணிவிடைக்காரியாக இருந்தாலும் சரியே. அவ்வாறு திறப்பது ஹராமான செயலாகும். ஆடை மாற்றும் பொழுதும் அதுபோன்ற ஏனைய சந்தர்ப்பங்களிலும் இந்த விடயத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

## 6. நாவைப் பேணுதல்

நாவென்பது அள்ளாஹ்வின் புறத்திலிருந்தும் உள்ள ஓர் அருட்கொடையாகும். அதனை நற்கருமங்களுக்கே பயன்படுத்த வேண்டும். பேசுவது நல்லவிடயம் இல்லையென்றிருந்தால் மௌனமாக இருக்க வேண்டும். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; “யார் அள்ளாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கிறாரோ பேசினால் நல்லதையே பேசட்டும். இல்லையானால் மௌனமாக இருக்கட்டும்.” (நூற்கள்: புஹாரி 6018, முஸ்லிம் 47)

நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாவைப் பேணிக்கொள்ளும்படியாக உபதேசித்திருக்கிறார்கள். அதனை உரிய முறையில் பயன்படுத்தவில்லையென்றால் நாங்கள் பிடிக்கப்படுவோம். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஆத் ரழியள்ளாஹு அன்ஹு அவர்களுக்குச் செய்த உபதேசத்தில் அவர்களின் நாவைப் பிடித்து “இதை உமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வீராக” என்று கூறினார்கள். அதற்கு முஆத் ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் “அள்ளாஹ்வின் நபியே!

நாம் பேசக்கூடிய விடயங்களைக் கொண்டு பிடிக்கப்படுவோமா?" என்று வினவ, "மக்கள் முகங்குப்புற நரகில் இழுத்து வீசப்படுவது நாவின் தீவினைகளின் காரணமாக அல்லாமல் வேறு எதனால்?!" என்று நபியவர்கள் கூறினார்கள். (நூற்கள்: திர்மிதி 2616, இப்னுமாஜா 3973, ஸஹீஹான ஹதீஸ்)

தேவையற்ற விடயங்களை முற்றுமுழுதாக விட்டுவிட வேண்டும். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "தனக்குத் தேவையற்ற விடயங்களை விட்டுவிடுவது இஸ்லாத்தின் அழகிய குணங்களிலிருந்தும் உள்ளதாகும்." (நூற்கள்: திர்மிதீ 2317, இப்னுமாஜா 3976, ஹஸனான ஹதீஸ்)

தனக்கோ, தனது குடும்பத்துக்கோ சம்பந்தப்படாத விடயத்தில் நாம் தலையிடக்கூடாது. எதைப்பற்றி எமக்கு அறிவில்லையோ அதைப் பற்றிப் பேசக்கூடாது. அள்ளாஹ் அல்-குர்ஆனில் கூறியுள்ளான்; "நபியே! எதைப்பற்றி உமக்குத் தீர்க்கமான அறிவில்லையோ அதை நீர் பின்தொடராதீர். ஏனெனில் நிச்சயமாக செவி, பார்வை, இதயம் ஆகிய இவை ஒவ்வொன்றும் மறுமையில் விசாரிக்கப்படக்கூடியதாய் இருக்கின்றன." (ஸூரா பனீ இஸ்ராஈல் 17: 36)

தான் காதால் கேட்ட செய்திகள் அனைத்தையும் அதனை ஊர்ஜிதப்படுத்தாமல் மற்றவர்களுக்கு ஒருபொழுதும் கூறக்கூடாது. நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "தான் செவிமடுத்த அனைத்தையும் மற்றவர்களுக்குக் கூறுவது அவனது பாவத்துக்குப் போதுமானதாகும்." (நூற்கள்: அபூதாவூத் 4992, ஹாகிம் 1:112, ஸஹீஹான ஹதீஸ்)

**தாயே! சகோதரியே! பின்வரும் விடயங்களை விட்டு நாவை முற்று முழுதாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.**

**6.1 புறம் பேசுதல் (ஙீபத்) (ஊர்பலாய் கழுவுதல்)**

புறம் பேசுதல் பாரதூரமான பாவங்களில் ஒன்றாகும். ஒரு சகோதரனைப் பற்றி அல்லது சகோதரியைப் பற்றி அவர் வெறுக்கும் விடயத்தை அவர் இல்லாத சமயத்தில் பேசுவதற்கே புறம் என்று சொல்லப்படும். அதனைப் பற்றி நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களே விளக்கியுள்ளார்கள். ஒருமுறை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் “புறம் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?” என்று வினவ, “அள்ளாஹ்வும், அவனது தூதருமே அதனைப் பற்றி நன்கறிந்தவர்கள்” என்று ஸஹாபாக்கள் கூறினார்கள். அப்பொழுது நபியவர்கள் “உமது சகோதரனைப் பற்றி அவர் வெறுக்கும் ஒரு விடயத்தைக் குறிப்பிடுவதுதான் புறம்” என்று கூறினார்கள். “எனது சகோதரனிடத்தில் நான் கூறும் விடயம் இருந்தாலுமா அதுபுறம்?” என்று வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள் “அவரிடம் உள்ள விடயத்தை நீர் கூறினால் அவரைப்பற்றி நீர் புறம்பேசிவிட்டீர். அவரிடத்தில் இல்லாத ஒரு விடயத்தை நீர் கூறினால் அவர்மீது பழி சுமத்திவிட்டீர்” என்று கூறினார்கள். (நூற்கள்: முஸ்லிம் 2589, அபூதாவூத் 4874)

அள்ளாஹு தஆலா அல்-குர்ஆனில் புறம்பேசுவதைப் பற்றி வன்மையாகக் கண்டித்திருக்கிறான். அள்ளாஹு தஆலா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்; “விசுவாசிகளே! தவறான எண்ணத்தில் பெரும்பாலானவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக சில எண்ணங்கள் பாவமானவையாகும். எவருடைய குறைகளையும் நீங்கள் துருவித்துருவி விசாரித்துக் கொண்டிருக்கவும் வேண்டாம். உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம்பேசவும் வேண்டாம். உங்களில் ஒருவர்

தன்னுடைய சகோதரனின் மாமிசத்தை அவர் மரணித்து சவமாக இருக்கும் நிலையில் புசிக்க விரும்புவாரா? அப்போது அதனை நீர் வெறுத்துவிடுவீர். இன்னும் நீங்கள் அள்ளாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். அள்ளாஹ் பாவமீட்சியை ஏற்றுக் கொள்பவன். மிகக் கிருபையுடையவன். (ஸூரதுல் ஹுஜுராத் 49:12) தனது சகோதரனைப் பற்றிப் புறம்பேசுவது மரணித்த அவரின் சவத்தை சாப்பிடுவதைப் போன்று என்று அள்ளாஹ் குறிப்பிட்டிருக்கிறான். உங்களில் யாருக்காவது மரணித்த சகோதரனினதோ, சகோதரியினதோ சடலத்தைச் சாப்பிட முடியுமா? அவ்வாறு செய்ய ஒருபொழுதும் நீங்கள் நினைத்துப் பார்க்க மாட்டீர்கள். அப்படியாக இருந்தால் பிறமுஸ்லிமான ஆணைப் பற்றியோ, பெண்ணைப் பற்றியோ ஏன் புறம் பேசவேண்டும்?!

மற்றவர்களின் குறைகளைப் பற்றிப் பேசுவதில் நமக்கென்ன பயன்? குறைகளைப் பற்றிப் பேசப்பேச எங்களுடைய செயலேட்டில் பாவங்கள் பதிவு செய்யப்பட்டுக் கொண்டே இருக்கும். அள்ளாஹ் எங்களுக்கு மற்றவர்களைப் பொறுப்புச் சாட்டவில்லை. ஒவ்வொருவருடைய குறைகளைப் பற்றியும் அவரவர்களே விசாரிக்கப்படுவார்கள். என்னுடைய குறையைப் பற்றி என்னிடம் விசாரிக்கப்படும். உங்களுடைய குறைகளைப் பற்றி உங்களிடம் விசாரிக்கப்படும். மற்றவர்களின் குறையைப் பற்றி என்னிடம் விசாரிக்கப்பட மாட்டாது. மற்றவர்களின் குறைகளைப் பற்றி நான் பேசினால் “நீ ஏன் அதைப் பேசினாய்?” என்று என்னிடம் விசாரிக்கப்படும். அப்படியானால் ஏன் நமக்கு அந்தத் தேவையில்லாத வேலை.

அள்ளாஹு தஆலா எங்களுக்கு இரண்டு கண்களைத் தந்திருக்கிறான். ஒன்றின் மூலமாக எமது குறையைப் பார்க்க வேண்டும். அடுத்ததன் மூலமாக அடுத்தவர்களின் நலவுகளைப் பார்க்க வேண்டும். எமது குறைகளைத் தேடித் திருத்த வேண்டும். மற்றவர்களின் நலவுகளைப் பார்த்து எமது வாழ்வில் எடுத்து நடக்க வேண்டும். பிற முஸ்லிம்களின் குறையை மறைத்தால்

அள்ளாஹ் எமது குறையையும் மறைப்பான். பிறரின் குறைகளை வெளிப்படுத்தினால் - அள்ளாஹ் பாதுகாக்க வேண்டும்!- எமது குறைகளை அள்ளாஹ் வெளிப்படுத்துவான். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைப்பாரோ இம்மையிலும், மறுமையிலும் அவர்குறைகளை அள்ளாஹ்வும் மறைப்பான். (நூல்: முஸ்லிம் 2699)

### 6.2. கோள் சொல்லுதல்

குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஒருவரின் பேச்சை மற்றொருவரிடம் எடுத்துச் சொல்வதற்கே கோள் என்று சொல்லப்படும். கோள் மூட்டுதல் பாவமான காரியங்களில் ஒன்றாகும்.

அள்ளாஹு தஆலா அல்-குர்ஆனில் கோள் சொல்லித் திரிபவர்களைப் பற்றி தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறான்; “இழிந்தவனாக, அதிகமாக சத்தியம் செய்யக்கூடிய ஒவ்வொருவனுக்கும் நீர் கீழ்ப்படியாதீர். (அவன் மனிதர்களின் தன்மானங்களில்) குறை கூறுபவன்; கோள் சொல்லிக்கொண்டு திரிபவன்.” (ஸூரா கலம் 68:10-11)

கோள் சொல்வதைப் பற்றி நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடுமையாக எச்சரித்தார்கள். “கோள் சொல்லித் திரிபவன் சொர்க்கத்தில் நுழையமாட்டான்” என நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூற்கள்: புஹாரி 6056, முஸ்லிம் 105)

கோள் சொல்லித் திரிபவனுக்கு கப்ரில் வேதனை செய்யப்படும். ஒருமுறை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு கப்ருகளுக்குப் பக்கத்தால் நடந்து செல்லும் பொழுது பின்வருமாறு கூறினார்கள்; “இந்த இரண்டு கப்ருகளிலும்

இருப்பவர்கள் வேதனை செய்யப்படுகிறார்கள். (மனிதர்களின் பார்வையில்) வேதனை செய்யப்படுமளவுக்குப் பெரும் பாவமல்ல. (ஆனால் அள்ளாஹ்வின் பார்வையில் பெரும் பாவம்தான்.) அவர்களில் ஒருவர் கோள்சொல்லித் திரிபவராக இருந்தார். மற்றவர் சிறுநீர் கழித்துவிட்டு சுத்தம் செய்யாதவர்." (நூற்கள்: புஹாரி 216, முஸ்லிம் 1292)

ஒற்றுமையாக இருந்த குடும்பங்களை, அல்லது கணவனையும், மனைவியையும் கோள் சொல்லிப் பிரிப்பது பெரும் பாவங்களில் ஒன்றாகும். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "யார் கணவனுக்கெதிராக மனைவியை அல்லது எஜமானுக்கெதிராக அடிமையை தூண்டிவிடுகிறாரோ அவர் எங்களைச் சார்ந்தவரல்ல. (நூற்கள்: அபூதாவூத் 2175, ஹாகிம் 2:196, ஸஹீஹான ஹதீஸ்)

### 6.3 சாபமிடுதல் (பத்துஆ செய்தல்)

யாரையும் ஒருபோதும் சாபமிடக் கூடாது. சாபமிடுதல் பாரிய பாவங்களில் ஒன்றாகும். "ஒரு முஃமினை சாபமிடுவது அவரைக் கொலை செய்வதைப் போன்று" என நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்: புஹாரி 6105)

நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "சாபமிடக்கூடியவர்கள் நாளை மறுமை நாளில் பரிந்துரை செய்யக் கூடியவர்களாகவோ, சாட்சியளிக்கக் கூடியவர்களாகவோ இருக்க மாட்டார்கள். (நூல்: முஸ்லிம் 2598) ஓர் உண்மையான முஃமினான ஆணோ, பெண்ணோ சாபமிடக்கூடியவராக இருக்கக்கூடாது.

ஒருமுறை நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தோழர்களுடன் ஒரு பிரயாணத்தில் இருந்தார்கள். அந்தப்

பிரயாணத்தில் இருந்த அன்ஸாரிப் பெண் ஒருவரின் ஒட்டகம் அடம் பிடித்தது. உடனே அப்பெண்மணி அந்த ஒட்டகத்தை சபித்தாள். அவளின் சப்தம் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காதில் கேட்ட பொழுது "அந்த ஒட்டகத்தின் மீதிருக்கும் பொருட்க்ளை எடுத்துவிட்டு அதனை (சுதந்திரமாக நடமாடித்திரிய) விட்டுவிடுங்கள். ஏனெனில் அந்த ஒட்டகம் சபிக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்கள். (நூல்: முஸ்லிம் 2596)

## 6.4 பரிகாசம் செய்தல்

ஏனைய பெண்களைப் பரிகாசம் செய்வது பாவமான காரியமாகும். அள்ளாஹ் அல்-குர்ஆனில் கூறியிருக்கின்றான்; "விசுவாசிகளே! ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். (பரிகாசம் செய்யப்பட்ட)அவர்கள் (பரிகாசம் செய்யும்) இவர்களைவிட சிறந்தவர்களாக இருக்கலாம். (அவ்வாறே) எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம். பரிகாசம் செய்யப்பட்ட அவர்கள்) பரிகாசம் செய்யும் இவர்களைவிட சிறந்தவர்களாக இருக்கலாம். உங்களில் சிலர் சிலரைக் குறைகூறவும் வேண்டாம். உங்களில் சிலர் சிலரை (அவருக்கு வைக்கப்படாத பட்டப்) பெயர்களால் அழைக்கவும் வேண்டாம். விசுவாசம் கொண்ட பின்னர் (தீயவற்றைக் குறித்துக் காட்டும்) தீய பெயர் (கூறவது) மிகக் கெட்டதாகிவிட்டது. எவர்கள் (இவற்றில் இருந்து) தௌபாச் செய்து மீளவில்லையோ அவர்கள் அநியாயக்காரர்கள்." (ஸூரதுல் ஹுஜுராத் 49:11)

ஒருபொழுதும் யாரையும் தாழ்வாகக் கருதக் கூடாது. மு.்.மினான அனைத்துப் பெண்களும் என்னைவிடச் சிறந்தவர்கள் என்றே கருத வேண்டும். தன்னைப் போன்று ஆடை அணியாததால் எந்தப் பெண்ணையும் சாதாரணமாக நினைக்கக்கூடாது. சிலவேளை நாம் சாதாரணமாக நினைக்கும் அந்தப் பெண் அள்ளாஹ்விடத்தில் எங்களைவிட அந்தஸ்து கூடியவளாக இருக்கலாம். அள்ளாஹ் விடத்தில் எங்களின் அந்தஸ்து என்ன? அவர்களின் அந்தஸ்து

என்ன? என்பதை மரணத்தின் பின்னர் மறுமையில் அள்ளாஹ்தான் தீர்ப்புச் செய்வான். அள்ளாஹ் தீர்ப்புச் செய்ய இருக்கும் ஒன்றுக்கு நாம் எவ்வாறு தீர்ப்புச் செய்வது? அள்ளாஹ்விடத்தில் கண்ணிய மானவர் மிக இறையச்சமுடையவரே. அள்ளாஹ் அல்குர்ஆனில் கூறியள்ளான்; "நிச்சயமாக அள்ளாஹ்விடத்தில் உங்களில் மிக்க கண்ணியமானவர் உங்களில் மிகவும் பயபக்தியுடையவர்தான்." (ஸூரதுல் ஹுஜுராத் 49:13) யாரிடத்தில் எவ்வளவு இறையச்சம் இருக்கிறது என்பதைப் பற்றி அள்ளாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

### 6.5 ஒப்பாரி வைத்தல்

மரணித்தவரின் நலவுகளைக்கூறி சப்தமிட்டு அழுவதற்கு ஒப்பாரி என்று சொல்லப்படும்.

ஒப்பாரி வைத்தல் பாவமான காரியங்களில் ஒன்றாகும். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒப்பாரி வைத்து அழக்கூடிய பெண்களை கடுமையாக எச்சரித்துள்ளார்கள். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "மனிதர்களிடத்தில் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. அவை நிராகரிப்பின் வகையைச் சேர்ந்ததாகும். பரம்பரையைக் குறைகூறிக் குத்திக்காட்டுவது; மரணித்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுவது." (நூல்: முஸ்லிம் 67) மேலும் நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "ஒப்பாரி வைக்கும் பெண் தவ்பா செய்யவில்லையானால் மறுமை நாளில் சொறியாலான மேலாடையும், தாராலான கீழாடையும் அவளுக்கு அணிவிக்கப் படும்." (நூற்கள்: முஸ்லிம் 934, இப்னுமாஜா 1581)

நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "கன்னத்தில் அறைந்துகொண்டு, ஆடையின் நெஞ்சுப் பகுதியைக் கிழித்துக்கொண்டு அறியாமைக்கால வாசகங்களைக் கூறி பிரார்த்திப்பவர் எங்களைச் சாரந்தவரல்ல." (நூற்கள்: புஹாரி 1294, முஸ்லிம் 103)

ஏதாவது துன்பங்கள் நிகழ்ந்தால் அல்லது சோதனைகள் ஏற்பட்டால் "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" என்று கூறிக்கொள்ள வேண்டும். ஒப்பாரி வைக்காமல் அழுவதற்கு அனுமதி இருக்கிறது. நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்கூட தன்குடும்பத்தில் உலகை விட்டுப் பிரிந்து சென்றவர்களுக்காக அழுதிருக்கிறார்கள்.

## 7. குழந்தை வளர்ப்பு

அள்ளாஹு தஆலா தன் அடியார்களுக்கு வழங்குகின்ற அருட்கொடைகளில் ஒன்றுதான் குழந்தைப் பாக்கியம். அந்தப் பாக்கியம் பெற்ற ஒவ்வொரு தாய் தந்தையரும் தங்கள் குழந்தைகளை இஸ்லாமிய மார்க்கத்தின் போதனைகளின் அடிப்படையில் வளர்ப்பது கட்டாயமாகும். குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதில் தாய், தந்தை இருவருக்கும் பொறுப்பிருந்தாலும் கூட, தாய்க்கே பாரிய பொறுப்பிருக்கிறது. ஏனெனில் குழந்தைகள் தன் சிறுபிராயத்தில் பெரும்பாலான நேரங்களை தாயுடனேயே கழிக்கின்றனர். அந்தப் பொறுப்பைப் பற்றி நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்; "உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகள். உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக் குறித்து (அள்ளாஹ்வினால்) விசாரிக்கப்படுவீர்கள்." (நூற்கள்: புஹாரி 7138, முஸ்லிம் 1829)

குழந்தைகளை மார்க்கப்பற்றுடன் நல்ல முறையில் வளர்த்தெடுத்தால் அதைப்போன்ற பாக்கியம் வேறெதுவும் இருக்காது. நாமனைவரும் ஒரு நாளைக்கு மரணிக்க இருக்கிறோம். நாம் இவ்வுலகைவிட்டுச் செல்லும்பொழுது அந்தக் குழந்தைகளை நல்லொழுக்கசீலர்களாக விட்டுச் செல்ல வேண்டும். அப்படி விட்டுச் சென்றால் அந்தக் குழந்தைகள் எங்களுடைய கப்ருக்கு ஸதகா ஜாரியா எனப்படும் நிலையான தர்மமாக மாறிவிடுவார்கள்.

அவர்களின் நன்மைகள் எங்களுக்கு வந்துகொண்டே இருக்கும். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; "ஒரு மனிதன் மரணித்து விட்டால் (ஸதகா ஜாரியா எனப்படும்) நிலையான தர்மம் அல்லது பயனுள்ள மார்க்கக்கல்வி, அல்லது அவருக்காகப் பிரார்த்தனை செய்யும் ஸாலிஹான பிள்ளை ஆகிய மூன்றைத் தவிர அவரின் மற்ற செயல்கள் அனைத்தும் (உலகத்துடன்) நின்றுவிடுகின்றன. (நூல்: முஸ்லிம் 1631, இப்னுமாஜா 1376)

குழந்தைகளுக்கு முன் எல்லாவற்றுக்கும் முதன்மையாக எங்களுடைய வாழ்க்கையைச் சீர்செய்து கொள்ள வேண்டும். தாய் தந்தையர் எதைச் செய்வார்களோ அதைப் பிள்ளைகள் நல்ல செயல் என்று நினைப்பார்கள். பெற்றோர் எதைச் செய்யாமல் விட்டுவிடுவார்களோ அதனைத் தீயசெயல் என்று கருதுவார்கள். எனவே பெற்றோர் பிள்ளைகளுக்கு முன்னிலையில் நன்நடத்தையை மேற்கொள்வதே அவர்களை வளர்ப்பதற்குரிய சிறந்த வழிமுறையாகும்.

## 7.1. பெற்றோரின் முதன்மையான பொறுப்புக்கள்

01. "லா இலாஹ இல்லள்ளாஹ் முஹம்மதுர் ரஸூலுள்ளாஹ்" என்ற வாசகத்தை சரியாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தை சற்று வளர்ந்து வரும்போது 'வணக்கத்துக்குரியவன் அள்ளாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மத் ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அள்ளாஹ்வின் தூதராவார்கள்' என்ற அதன் பொருளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

02. அள்ளாஹ் தனித்தவன். இணை, துணை இல்லாதவன். நம்மைப் படைத்தவன். எங்களுக்கு உணவளிப்பவன். எங்களைப் பாதுகாப்பவன். என்பதைப் புரிய வைத்து அள்ளாஹ்வின் மீதான அன்பையும், நம்பிக்கையையும் பிள்ளைகளின் இதயத்தில் வளர்க்க வேண்டும்.

03. பிள்ளைகளுக்கு சொர்க்கத்தைப் பற்றிய ஆசையை ஊட்ட வேண்டும். அதிலுள்ள இன்பங்களை எடுத்துக் கூறவேண்டும். தொழுது, நோன்பு நோற்று, தன் பெற்றோருக்கு கட்டுப்பட்டு நடந்து அள்ளாஹ்வுக்கு திருப்தியளிக்கின்ற செயல்களைச் செய்கின்ற வர்களுக்கே சொர்க்கம் கிடைக்கும் என்பதை எடுத்துக்கூற வேண்டும். நரகத்தைப் பற்றிய பயத்தை அவர்களின் உள்ளத்தில் வளர்க்க வேண்டும். அவர்கள் புரிகின்ற விதத்தில் அதிலுள்ள வேதனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். தொழுகையை விட்டவர், தன் பெற்றோருக்கு மாறு செய்தவர், அள்ளாஹ்வைக் கோபப்படுத்தக்கூடிய விதத்தில் நடந்துகொண்டவர், இஸ்லாம் போதித்த விதத்தில் வாழ்வதைப் புறக்கணித்தவர் ஆகியோர் நரகம் செல்வார்கள் என்று எச்சரிக்க வேண்டும்.

04. தேவைகளை அள்ளாஹ்விடமே கேட்க வேண்டும். அவனிடம் மட்டுமே உதவிதேட வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். “நீ கேட்டால் அள்ளாஹ்விடமே கேள். உதவிகோரினால் அள்ளாஹ்விடமே உதவிகோரு” என்று நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் சிறிய தந்தையின் மகன் இப்னு அப்பாஸ் ரழியள்ளாஹு அன்ஹு அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். (நூற்கள்: திர்மிதீ 2516, அஹ்மத் 2669, ஸஹீஹான ஹதீஸ்)

05. சிறுவர், சிறுமியர்களுக்கு சிறு பிராயத்திலேயே தொழுகையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் பெரியவர்களாகும் பொழுது மிகுந்த பற்றுடன் அதனை நிறைவேற்றுவார்கள். நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்; “உங்கள் பிள்ளைகளுக்கு ஏழுவயதை அடைந்தால் தொழும்படி அறிவுறுத்துங்கள். பத்து வயதை அடைந்து(ம் தொழா) விட்டால் அவர்களை அடி(த்தாவது தொழ வை)யுங்கள். மேலும் படுக்கையில் அவர்களுக்கு இடையில் பிரித்து (தூங்க) வையுங்கள். (நூற்கள்: அபூதாவூத் 495, அஹ்மத் 6756, ஸஹீஹான ஹதீஸ்)

அவர்கள் பார்க்கும்படியாக வுழூச் செய்ய வேண்டும். அவர்களுக்கு முன்னிலையில் தொழவேண்டும். குழந்தைகள் வளர வளர தொழுகையின் சட்டதிட்டங்களையும் படித்துக் கொடுக்க வேண்டும்.

06. பிள்ளைகளுக்கு அல்-குர்ஆனைத் திருத்தமாக ஓதக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஸூரதுல் பாத்திஹா (அல்ஹம்து ஸூரா) மற்றும் சிறிய ஸூராக்கள் ஆகியவற்றை முதலில் சொல்லிக் கொடுக்க வேண்டும். தொழுகையில் ஓதுகின்ற அத்தஹிய்யாத்தை மனனமிடச் செய்ய வேண்டும். அல்-குர்ஆனை தஜ்வீத் முறைப்படி அழுத்தம் திருத்தமாக கற்றுக் கொள்வதற்காகவும், ஹதீஸ்களையும் எழுத்துக்களையும் படித்துக் கொள்வதற்காகவும் பள்ளிக்கூடங் களுக்கோ, மக்தப்களுக்கோ அவர்களை அனுப்பி வைக்க வேண்டும். அல்லது ஏதாவது ஒரு விதத்தில் ஒரு முஅல்லிமை ஏற்பாடு செய்ய வேண்டும்.

07. சிறுவர்களை ஜுமுஆத் தொழுகைக்கும், ஐங்காலத் தொழுகைகளை ஜமாஅத்தாக தொழுவதற்கும் ஆர்வமூட்டி பள்ளி வாசலுக்கு அனுப்பி வைக்க வேண்டும். குழந்தைகள் ஏதும் தவறு செய்தால் மென்மையான முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். அதட்டவோ, சப்தம் போடவோ கூடாது.

08. ஏழு வயதிலிருந்தே பிள்ளைகளை நோன்பு நோற்கப் பழக்க வேண்டும்.

09. கூடாத செயல்களை விட்டும் அவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும். இணைவைத்தல், ஏசுதல், சாபமிடுதல், தகாத வார்த்தைகள் பேசுதல் ஆகியவற்றிலிருந்து விலகியிருக்குமாறு எச்சரிக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு நாம் நல்ல வழிகாட்டியாக இருக்க அவர்கள் முன்னிலையில் தீயவற்றிலிருந்து நம் நாவை பேண வேண்டும்.

10. உடலுக்கோ, உள்ளத்துக்கோ, சிந்தனைக்கோ பயன்விளை விக்காத எல்லாவித விளையாட்டுக்களை விட்டும் அவர்களைத் தடுக்க வேண்டும்.

11. ஆபாசமான படங்கள், மற்றும் மறைக்கப்படவேண்டிய உறுப்புக்கள் மறைக்கப்படாமல் உள்ள உருவப்படமுள்ள பத்திரிகைகள், பாலுறவைத் தூண்டும் கதைகள், நாவல்கள் ஆகியவற்றை விட்டும் தடுக்க வேண்டும். ஆபாசங்கள், வன் முறைகள் கொண்ட சினிமாப்படங்களையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிக்களையும், கார்ட்டுன்களையும் விட்டுத் தடுக்க வேண்டும்.

12. சொல்லிலும், செயலிலும் உண்மையைக் கடைபிடிக்க பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும். நாம் அவர்களிடம் கேலியாகக்கூட பொய் பேசக்கூடாது. அவர்களுக்கு நாம் வாக்குக் கொடுத்தால் நமது வாக்கை நிறைவேற்ற வேண்டும். சிறுவனான அப்துள்ளாஹ் இப்னு ஆமிர் ரழியள்ளாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; "நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனது வீட்டில் இருக்கும் பொழுது எனது தாய் என்னைப் பார்த்து "இங்கே வா! உனக்குத் தருகிறேன்" எனக் கூறினார். அதைக்கேட்ட நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீங்கள் எதைக் கொடுக்க நாடினீர்கள்?" என எனது தாயிடம் வினவ "பேரீத்தம்பழம் கொடுக்க நாடினேன்" எனக் கூறினார். உடனே நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீர் உனது மகனுக்கு எதனையும் கொடுக்கவில்லையானால் நீர் ஒரு பொய் பேசியதாக (பாவம்) எழுதப்படும்" என்று கூறினார்கள். (நூற்கள்: அஹ்மத் 15642, அபூதாவூத் 4991, ஹஸனான ஹதீஸ்)

13. கோபத்தில்கூட பிள்ளைகளை சாபமிடக்கூடாது. ஏனென்றால் துஆவில் நன்மையை வேண்டினாலும், தீமையை வேண்டினாலும் அது ஏற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. சிலவேளை எமது பத்துஆவே அவர்கள் கெட்டுப்போக காரணமாகலாம். பிள்ளைகள் தவறு செய்தால் "அள்ளாஹ் உன்னைத் திருத்தட்டும்!" என்று கூறுவதே சிறந்த முறையாகும்.

14. பெரிய வயதில் பற்றுதலுடன் கடைபிடிப்பதற்காக சிறு பிராயத்திலிருந்தே முறையாக உடலை மறைப்பதற்கு பெண் பிள்ளைகளை ஆர்வமூட்ட வேண்டும். எனவே குட்டையான ஆடைகளை சிறுமிகளுக்கு அணிவிக்கக்கூடாது. ஏழு வயதிலிருந்தே தலையில் முந்தானை போட்டுக்கொள்ளும்படி கூறவேண்டும். சிறு வயதிலிருந்தே ஆண்பிள்ளைகளுக்கு முழங்காலை மறைத்து அணியும் கீழ் ஆடைகளையே அணியச் செய்ய வேண்டும்.

15. எடுப்பது, கொடுப்பது, உண்ணுவது, பருகுவது, எழுதுவது ஆகியவற்றில் வலது கரத்தைப் பயன்படுத்த குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு செயலின் தொடக்கத்திலும் குறிப்பாக உண்ணும்போதும், பருகும்போதும் “பிஸ்மில்லாஹ்”(அள்ளாஹ்வின் பெயரால்) என்று சொல்வதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். உட்கார்ந்து சாப்பிட, குடிக்க கற்றுக் கொடுக்க வேண்டும். முடிந்தபின்“அல்ஹம்து லில்லாஹ்” (புகழனைத்தும் அள்ளாஹ்வுக்கே) என்று சொல்ல பயிற்றுவிக்க வேண்டும்.

16. சுத்தமாக இருப்பதற்கு பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும். நகத்தை வெட்டிக் கொள்ளவும், உணவுக்கு முன்பின் கைகளைக் கழுவிக் கொள்ளவும் பழக்கப்படுத்த வேண்டும். மலசலம் கழித்தபின் தண்ணீரால் சுத்தம் செய்வதை கற்றுக் கொடுக்க வேண்டும். சுத்தமாக இருந்தால்தான் தொழுகை செல்லுபடியாகும் என்பதை சொல்லிக் கொடுக்க வேண்டும்.

17. பிள்ளைகள் தவறுசெய்தால் அவர்களை அவமானப்படுத்தாது இரகசியமாகவும், மென்மையாகவும் அறிவுரை கூறவேண்டும்.

18. அதான் (பாங்கு) சொல்லப்படும்போது அமைதியாக இருந்து முஅத்தின் சொல்வதைப் போன்று சொல்ல வேண்டுமென்றும், நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது ஸலவாத்துச் சொல்லி அதானின் துஆவை ஓதவேண்டும் என்று அறிவுறுத்த வேண்டும்.

19. சாத்தியமாக இருந்தால் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனி விரிப்பை வைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் தனித்தனி போர்வையைப் பயன்படுத்த வேண்டும். பெண் பிள்ளைகளைத் தனி அறையிலும், ஆண் பிள்ளைகளை தனி அறையிலும் தூங்க வைப்பது ஏற்றமானது.

20. குப்பைகளை, அசுத்தங்களை தெருக்களில் எறியாதிருக்கவும், இடையூறு தருபவற்றை பாதையிலிருந்து அகற்றவும் பிள்ளைகளை பழக்கப்படுத்த வேண்டும்.

21. தீய நட்பு பற்றி எச்சரிக்க வேண்டும். கெட்ட நண்பர்களுடன் தோழமை கொள்வதை விட்டும் தடுக்க வேண்டும். அவர்கள் யார் யாருடன் பழகுகிறார்கள், எங்கே போய் வருகிறார்கள் என்பதைப் பெற்றோர் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

22. சொந்தக்காரர்கள் வீட்டிலோ, நண்பர்கள் வீட்டிலோ பெற்றோ ரின்றி பிள்ளைகளை மாத்திரம் இரவில் தங்கவிடக் கூடாது.

23. எல்லோருக்கும் ஸலாம் கூறப் பழக்க வேண்டும். முதன்மையாக நீங்களே அவர்களுக்கு ஸலாம் சொல்ல வேண்டும்.

24. பக்கத்து வீட்டினருக்கு நலவு செய்ய வேண்டுமென்றும், அவர்களுக்கு கெடுதி செய்யக்கூடாதென்றும் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறவேண்டும்.

25. விருந்தாளியை கண்ணியப்படுத்தவும், மரியாதை செய்யவும், அவருக்கு விருந்தோம்பல் செய்யவும் பிள்ளைகளைப் பழக்கப்படுத்த வேண்டும்.

26. நபிமார்களின் வரலாறுகளையும், ஸஹாபாக்களின் சரிதைகளையும் அவர்களுக்கு முன் எளிய நடையில் எடுத்துக் கூறவேண்டும். பொய்க் கதைகளையும், கற்பனைக் கதைகளையும் அவர்களுக்குச் சொல்லக்கூடாது.

27. வீரமாக இருக்க வேண்டுமென்றும், நன்மையை ஏவித் தீமையைத் தடுக்க வேண்டுமென்றும் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்ட வேண்டும். யானை, பூனை, பேய், பிசாசு என்று கூறி அவர்களை பயமுறுத்தக் கூடாது.

28. இஸ்லாத்தின் கடமைகளையும், ஈமானின் கடமைகளையும் படித்துக் கொடுக்க வேண்டும்.

இஸ்லாத்தின் கடமைகள் ஐந்தாகும். அவையாவன:-

1. வணக்கத்துக்குரியவன் அள்ளாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லையென்றும், முஹம்மது ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அள்ளாஹ்வின் தூதர் என்றும் சாட்சி கூறுவது.

2. தொழுகையை நிலைநாட்டுவது.

3. ஸகாத் கொடுப்பது.

4. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது.

5. ஹஜ் செய்வது.

ஈமானின் கடமைகள்

ஈமானின் கடமைகள் ஆறாகும். அவையாவன:-

01. அள்ளாஹ்வை ஈமான்கொள்ள வேண்டும்.

02. அவனுடைய மலக்குகளை ஈமான் கொள்ள வேண்டும்.

03. அவனுடைய வேதங்களை ஈமான் கொள்ள வேண்டும்.

04. அவனுடையை தூதர்களை ஈமான் கொள்ள வேண்டும்.

05. மறுமைநாளை ஈமான் கொள்ள வேண்டும்.

06. கழா கத்ர் எனும் அள்ளாஹ்வின் விதியை ஈமான் கொள்வது.

நன்மை, தீமை அனைத்தும் அள்ளாஹ்வின் புறத்திலிருந்தே நிகழ்கின்றன என ஈமான் கொள்ள வேண்டும்.


28. இசைகள் கேட்பதைவிட்டும், பாடல்களைச் செவிமடுப்பதை விட்டும் அவர்களைத் தடுக்க வேண்டும். இசைகளில்லாத இஸ்லாமிய கவிதைகளைக் கேட்பதற்கு அனுமதியிருக்கிறது.


30. குடும்பத்தினருக்கு மார்க்கக் கல்வியைப் படித்துக் கொடுப்பதற்காக தினந்தோறும் தனியொரு அமர்வை ஏற்படுத்திக் கொள்வது சிறப்புக்குரியது. அதில் இஸ்லாமிய நூல்களும், நபி ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்களான ஸஹாபாக்களினதும், ஸஹாபாப் பெண்களினதும் வரலாறு பற்றி பேசுகின்ற நூல்களையும் படித்துக் காட்ட வேண்டும்.


# உசாத்துணை நூல்கள்

| நூலின் பெயர் | தொகுப்பாசிரியர் |
|---|---|
| 1. அல்-குர்ஆன் | |
| 2. புஹாரி | இமாம் புஹாரி |
| 3. முஸ்லிம் | இமாம் முஸ்லிம் |
| 4. அபூதாவூத் | இமாம் அபூதாவூத் |
| 5. திர்மிதி | இமாம் திர்மிதி |
| 6. நஸாஈ | இமாம் நஸாஈ |
| 7. இப்னுமாஜா | இமாம் இப்னுமாஜா |
| 8. முஸ்னத் அஹ்மத் | இமாம் அஹ்மத் |
| 9. ஹாகிம் | இமாம் ஹாகிம் |
| 10. அத்-தத்கிரதுல் ஹழ்ரமிய்யா | இமாம் ஹழ்ரமீ |
| 11. மின்ஹாஜுல் முஸ்லிம் | அபூபக்ர் ஜஸாஇரீ |
| 12. மின்ஹாஜுல் முஃமின் | கலாநிதி முஸ்தபா முராத் |


# இஹ்ஸான் மௌலவியின் ஏனைய வெளியீடுகள்






































ISBN 9 779551 656493

ISLAMIC BOOK HOUSE
11 – 268 48 51
Rs. 120.00
00035420 – 1
Pengalukkana
Anbalippu – Tamil – Ihas
07.01.2019

கிடைக்குமிடங்கள்:

இஸ்லாமிய நூல் நிலையங்கள்